வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 14.04.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 125 | பக்கங்கள் : 16




# பெரமுனவுக்குள் முற்றியது பிளவு!

## ஜனாதிபதி வேட்பாளர் சர்ச்சையால்

கொழும்பு, ஏப். 14

**அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க போட்டியிடுவார் என ஊடகங்களில் வெளியான செய்திகளை அடுத்து சிறிலங்கா பொதுஜன பெரமுன பிளவுபட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவிக் கின்றன.**

அடுத்த முறை ஜனாதி பதித் தேர்தலில் போட் டியிடப்போவதாக ஜனா திபதி தெரிவித்துள்ளார் எனத் தகவலறிந்த வட் டாரங்கள் தெரிவிக் கின்றன.

இவ்வாறான செய்தி கள் வெளியாகியதைய டுத்து, பொதுஜன பெர முனவின் பாராளுமன்ற உறுப்பினரான முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனு கம, ஜனாதிபதி போட்டி யிட்டால் நாங்கள் நிச்ச யமாக அவருக்கு ஆதரவ ளிப்போம் எனக் கூறியுள் ளார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தமது கட்சியின் தேசிய அமைப்பா

15




# அனைவருக்கும் சிறு ஆறுதல் தருகின்றது இந்த புத்தாண்டு

## வாழ்த்துச் செய்தி ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஏப். 14

இப்புத்தாண்டில் அனைவருக்கும் சிறு ஆறுதல் தருகின்ற சூழல் உருவாக்கியுள்ளது.

அடுத்த புத்தாண்டில், இதனை விடவும் சௌபாக்கியத்தையும் செழிப்பையும் ஏற்படுத்திக்கொள்ளவே நாம் முயற்சிக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது புத்தாண்டு வாழ்த் துச் செய்தியில்

15

# பெருமளவு போதைமாத்திரைகள் சிலாவத்துறையில் நேற்று மீட்பு!



மன்னார், ஏப். 14

மன்னார் - இரா ணுவ புலனாய்வு பிரி வினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மன் னார் பிரதேச ஊழல் ஒழிப்புப் பிரிவினரு டன் இணைந்து மன் னார் சிலாவத்துறை பகுதியில் நேற்று அதி காலை முன்னெடுக்கப் பட்ட சுற்றிவளைப்பின் போது 1 லட்சத்து 11 ஆயி ரம் போதை மாத்திரைகள் கண்டுபிடிக்கப்பட்டுள் ளன.

மீட்கப்பட்ட போதை மாத்திரைகளின் பெறுமதி 16 மில்லியன் ரூபா என தெரிய வந் துள்ளது.

சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து கடல் வழியாக கொண்டு வந்து குறித்த பகுதியில் மறைத்து வைக்கப் பட்டிருந்தபோது

15

# நிமோனியா காய்ச்சலினால் 4 வயது சிறுவன் உயிரிழப்பு!

## உடையார்கட்டு பகுதியில் துயரம்

முல்லைத்தீவு, ஏப். 14

முல்லைத்தீவு - புதுக் குடியிருப்பு உடையார் கட்டு பிரதேசத்தில் வசித் துவரும் சிறுவன் ஒருவன் நிமோனியா காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

புதுக்குடியிருப்பு - உடையார்கட்டு பகுதி யைச் சேர்ந்த நிர்மலன் கபீஸ் என்ற 04 வயது டைய சிறுவனே இவ் வாறு உயிரிழந் துள்ளார்.

சிறுவன் சளி காய்ச்ச லால் பீடிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தி னம் புதுக்குடியி ருப்பு ஆதார மருத் துவம னைக்கு

15

# ஊடகங்களை அடக்கும் சட்டம் விமல் வீரவன்ஸ கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஏப். 14

"ஊடகங்களை அடக்கி ஒடுக்க இந்த அரசு புதிய சட்டத்தைக் கொண்டு வந்தால் அரசி லுள்ள அனைவரும் வெட்கித் தலைகுனிய வேண்டும்" என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ஸ தெரி வித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் மேலும் கூறியதாவது:

ஒரு புறம் புதிய பயங் கரவாத எதிர்ப்புச் சட் டம், மறுபுறம் ஊடகங் களைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் என இரண்டு கொடூர

15

# இன்று உயர் வெப்பம்!

கொழும்பு, ஏப். 14

நாட்டின் பல பகுதிக ளில் நாளை கடுமையான வெப்பம் நிலவுமென எச் சரிக்கை விடுக்கப்பட் டுள்ளது.

அதற்கேற்ப நாட்டின் பல பகுதிகளுக்கும் வளி மண்டலவியல் திணைக் களம் "வெப்ப சுட்டெண் ஆலோசனை" வெளியிட் டுள்ளது.

மேல், தெற்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகா ணங்களிலும் குருநாகல், கிளிநொச்சி, வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் சில இடங்களில் வெப்பச் சுட் டெண், மனித உடலில் உணரப்படும் வெப்ப நிலை 'எச்சரிக்கை' மட்டத்துக்கு அதிகரிக் கும் என

15

# பாரம்பரிய உணவுத்திருவிழா 2 தினங்கள் யாழ்ப்பானத்தில்!

யாழ்ப்பாணம், ஏப். 14

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு யாழ்.மாவட்ட செயலகத்தினால் நாளை யும் நாளை மறுதினமும் முற்றவெளி மைதானத் தில் யாழ்ப்பாண பாரம் பரிய உணவுத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள் ளதாக மாவட்ட செய லாளர் அ.சிவபாலசுந் தரன் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட செய லகத்தில் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- மாலை நேரங்

15

# சர்வதிகார நாடாக இலங்கையை மாற்றுவதற்கு நாம் இடமளியோம்!

## சஜித் பிரேமதாஸ திட்டவட்டம்



கொழும்பு, ஏப். 14

சுதந்திரமான ஊடகம் அற்ற நாட்டில் சர்வாதி கார ஆட்சி தலைதூக் கும். அதற்கு ஒருபோதும் நாம் இடமளித்து விடக் கூடாது என எதிர்க்கட் சித் தலைவர் சஜித் பிரே மதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஊடகங்களுக்கு எதிராக அடக்குமுறை களை முன்னெடுப்பதற் காக ஒளிபரப்பு அதிகார சட்டத்தை அறிமு கப்ப டுத்துவதற்கு அரசாங்கம்

15

# திருகோணமலை கடற்பரப்பில் மிதக்கும் தார் போன்ற படலம்!

## மாதிரிகளை கொண்டு விசேட ஆய்வு

கொழும்பு, ஏப். 14

திருகோணமலை கடற் பரப்பில் தார் போன்ற திரவ படலம் மிதப்பதன் காரணமாக நேற்று முன் தினம் முதல் கடற்றொ ழிலுக்கு பாதிப்பு ஏற் பட்டுள்ளது.

15



**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது…!

தெற்கில் உள்ள பல்வேறு தரப்பினருடனும் கடந்த சில நாட்களாக தொடர்பு கொள்கின்றபோதிலெல்லாம் கிடைக்கின்ற தகவல்கள் ஆச்சரியத்தையும் கூடவே சிரிப்பையும் வரவழைக்கின்றன.

ஒவ்வொருவரும் தங்களை தனி ஆளாக காட்டிக்கொள்ளாமல் தம்மை ஒரு பெரும் அமைப்பாக -

தங்களிடம் ஒரு மிகப் பெரிய வலையமைப்பே இருப்பது போலவே காட்டிக் கொள்ள முற்படுவதை காண முடிகின்றது.

அடுத்த தேர்தல் ஜனாதிபதி தேர்தல்தான் என்று பரவலாக நம்பப்படுவதால், அனைவரின் கவனமும் அதில் இருப்பதால், எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பதில் ஒவ்வொவரும் தத்தமக்குள் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர் என்பதை புரிய முடிந்தது.

ஏற்கனவே ஒரு தொழிலதிபர் ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து பிரசாரத்தையே தொடங்கிவிட்டது பற்றி இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அவரும் பல்வேறு தரப்பினரையும் சந்தித்து ஆதரவு திரட்டிவருகின்றார்.

அண்மையில் கொழும்புக்கு சென்றுவிட்டு யாழ்ப்பாணம் திரும்பியிருந்த நண்பர் ஒருவரை சந்திக்க முடிந்தது.

அவர் கொழும்பில் நின்றபோது, தான் கலந்துகொண்ட முக்கிய சந்திப்பு ஒன்று குறித்து தகவல் சொன்னார்.

தெற்கிற்கும் வடக்கிற்கும் பொதுவாக உள்ள பிரச்னைகளை கண்டிறிந்து அவற்றைத் தீர்ப்பதற்காக ஒரு தேசிய அமைப்பு ஒன்றை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு அந்தச் சந்திப்பு கொழும்பில் நடந்ததாம்.

வடக்கிலிலுள்ள பிரச்னைகளை கேட்டறிவதற்காக இந்த நண்பரையும் அந்தச் சந்திப்புக்கு அழைத்திருக்கின்றார்கள்.

அவர்கள் ஒரு தீவிர பௌத்த மதவாதிகள் என்பதை அந்தச் சந்திப்புக்கு போன பின்னரே நண்பரால் புரிந்து கொள்ள முடிந்திருக்கின்றது. ஆனால் அவர்கள், தமது இலக்கு இந்து மதமல்ல என்றும், இந்துக்களுடன் சேர்ந்து பணியாற்றவே தாம் விரும்புவதாகவும் கூறியிருக்கின்றனர்.

அங்கே இருந்த ஒருவர், இன்று இலங்கையில் தேரவாத பௌத்தம் தோன்றுவதற்கு முன்னர், தமிழ் பகுதிகளில் தமிழர்களே பௌத்த விகாரைகளை அமைத்து வழிபட்டு வந்த வரலாறுகளை விலாவாரியாக அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களுக்கு விளக்கிக் கூறியிருக்கின்றார்.

இன்று, வடக்கில் பல இடங்களில் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையே ஏற்பட்டிருக்கும் முறுகல் நிலையை விளக்கிக்கூறிய அவர், இவை எல்லாவற்றையும் தமிழர்களைக்கொண்டே தீர்வு காணவேண்டும் என்ற கோணத்தில் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்.

இன்று அங்கும் இங்குமாக வடக்கில் இருக்கும் சில பௌத்த விகாரைகளின் எச்சங்கள் கூட தமிழ் பௌத்தர்களால் உருவாக்கப்பட்டவைதான் என்றும் அதற்காக அவற்றோடு கூட இருக்கும் இந்து ஆலயங்களை இடிப்பதோ அல்லது, அவற்றை மீளக்கட்டுவதை தடுப்பதோ தவறானது என்று விளக்கமளித்திருக்கிறார் ஒரு விசயம் தெரிந்த சிங்கள அன்பர் ஒருவர்.

இவை பற்றி நீண்ட ஆய்வுகள் தேவை. அதுவல்ல இந்தப் பத்தியில் நாம் சொல்ல வருவது.

அந்தக் கலந்துரையாடலில், அவ்வாறு ஒரு தேசிய இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கின்றபோது, அந்த இயக்கத்தில் வடக்கிலிருந்து யாரை சேர்க்கலாம் என்று இந்த நண்பரிடம் ஆலோசனை கேட்டிருக்கின்றார்கள்.

அந்த நண்பரை அந்த சந்திப்புக்கு அழைத்ததே அதற்காகத்தான் என்பதை அவர் அப்போதுதான் புரிந்து கொண்டிருக்கின்றார்.

அதுவல்ல தகவலுக்குரியது. அதவிட வடக்கில் அண்மைக்காலமாக அவ்வப்போது சில ஆர்ப்பாட்டங்களையும் சில கோமாளித்தனங்களை யும் செய்துகொண்டிருக்கும் ஒருவரைப்பற்றி அந்த நண்பரிடம் ஆலோசனை கேட்டிருக்கிறார்கள் அவர்கள்.

அதைக் கேட்டபோது தான் தன்னையறியாமலே வாய்விட்டு சிரித்து விட்டதாகவும், இவ்வளவு நேரமும் அவர்களுடன் கதைத்துக் கொண்டிருந்ததே பயனற்ற ஒன்று என்று புரிந்துகொண்டதாகவும் கூறிய நண்பர், அவர்கள் கேட்ட அந்த நபரைப்பற்றி தனக்கு தெரிந்த விடயங்களைப் பகிர்ந்கொண்டபோது அவர்கள் மற்றுமொரு நகைச்சுவையை உதிர்ந்திருக்கிறார்கள்.

‘தெற்கு அவரைத்தானே அடுத்த தமிழர் தலைவராக நினைத்துக் கொண்டிருக்கின்றது” என்றிருக்கிறார்கள் அவர்கள்.

இப்போதுதான், தெற்கின் கணிப்புக்கள் எப்படியெல்லாம் தவறாக இருந்ததால்தான் வடக்கு பற்றிய தவறான புரிதல்கள் இந்த நாட்டை குட்டிச்சுவராக்கி விட்டது என்பதை அவர்களுக்கு விளக்கியிருக்கிறார் நமது நண்பர்.

**- ஊர்க்குருவி**

# ஓமானில் இலங்கை பெண்கள் ஏலம் ஐ.நா. விசாரணைகளை ஆரம்பித்தது

கொழும்பு, ஏப். 14

ஓமானில் இலங்கை பெண்கள் பாலியல் தொழிலாளர்களாக ஏலத்தில் விடப்பட்ட சம்பவம் குறித்து ஐ.நா. விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அடிமைத்தனத்தின் தற்போதைய வடிவங்கள் தொடர்பிலான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் டொமொயோ ஒபக்கட்டா மூலம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இந்த விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இது தொடர்பில் பெப்ரவரி ஏழாம் திகதி அவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

மனித உரிமைகள் மீறல்கள் குறித்து அவர் அதில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை அரசாங்கம் 60 நாட்களிற்குள் பதிலளிக்க வேண்டும் என்ற போதிலும் இதுவரை அரசாங்கம் பதிலளிக்கவில்லை.

அந்த கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ள இரண்டு விசேட அறிக்கையாளர்களும் ஓமானுக்கு பாலியல் நோக்கத்திற்காக அல்லது தொழில்ரீதியான துஸ்பிரயோகத்திற்காக கொண்டு செல்லப்பட்ட பெண்கள் எதிர்நோக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுற்றுலா விசாவில் ஓமானிற்கு சென்ற 90 பெண்கள் இலங்கை அரசாங்கத்தின் புகலிட இல்லம் உட்பட புகலிட இல்லங்களில் சிக்குண்டனர் என தமக்கு கிடைத்துள்ளதாக அவர்கள் அந்த கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

பல பெண்கள் ஓமானிற்கு பாலியல் நோக்கத்திற்காக அல்லது தொழில்ரீதியான துஸ்பிரயோகத்திற்காக கடத்தப்பட்டுள்ளனர் என தகவல்கள் கிடைக்கின்றன. ஐக்கிய அரபு இராச்சியத்தில் தொழில்வாய்ப்பு என்ற போர்வையிலேயே இவர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனவும் ஐ.நாவின் அறிக்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சில பெண்கள் ஏலத்தில் விடப்பட்டனர். தனியார் வீடுகளில் வைக்கப்பட்டு துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். போதுமான உணவோ அல்லது உறங்குவதற்கான வசதிகளோ இருக்கவில்லை எனவும் ஐ.நாவின் அறிக்கையாளர்கள் கூறியுள்ளனர்.

(அ)

# துருக்கி நிலநடுக்கத்தில் பாதிப்புற்றோருக்கு இலங்கை அரசாங்கத்தினால் நன்கொடை!



கொழும்பு, ஏப். 14

அண்மையில் துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் 4.6 தொன் ஆடைகள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான துருக்கி தூதுவர் ரக்கிபே டெமெட் செகெர்சியோக்லுவிடம் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குறித்த நன்கொடையை கையளித்துள்ளார்.

அத்துடன் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான உறவுகளை எடுத்துரைத்த அமைச்சர், துருக்கி மக்களுடன் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் ஒற்றுமை பற்றியும் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சின் பதில் செயலாளர் யசோஜா குணசேகர, துருக்கிய தூதரகம் மற்றும் வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# கணக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசியல் கட்சிகளுக்கு பணிப்புரை!

கொழும்பு, ஏப். 14

இதுவரை முறையாக கணக்கு அறிக்கையை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள் குறித்து உடனடியாக அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்க தேர்தல் ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டத்தின் போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. 2021ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கையை தேர்தல் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதில் சில அரசியல் கட்சிகள் தொடர்ந்து கால தாமதம் செய்து வருவதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு தொடர்பான கணக்குகளை 14 நாட்களுக்குள் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அனுப்புமாறு அரசியல் கட்சிகளுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த காலக்கெடு கடந்த வாரத்துடன் முடிவடைந்தது.

இந்தநிலையில் கணக்குகளை முறையாக சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளின் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற அங்கீகாரத்தை இரத்து செய்ய தேர்தல் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. (அ)

## தென்கொரியா செல்கிறார் அநுர!

கொழும்பு, ஏப். 14

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, இன்று தென்கொரியாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென்கொரியாவில் தங்கியுள்ள இலங்கையர்களால் விடுக்கப்பட்ட அழைப்பையேற்றே அவர் அங்கு செல்லவுள்ளார். தென்கொரியாவில் குடியேறியுள்ள இலங்கையர் கள், தொழில் புரிபவர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து விடுத்த அழைப்பையேற்றே அநுர அங்கு செல்கின்றார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன், இலங்கையின் நடப்பு விவகாரம் பற்றி அவர் சிறப்புரையாற்றவுள்ளார். (அ)

## வெடிபொருட்களுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஏப். 14

வெடிபொருட்களுடன் சந்தேகநபர் ஒருவரை புல்மோட்டை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புல்மோட்டை - கொக்கிளாய் குளக்கரையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே, குறித்த பகுதியினைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 14 டெட்டனேட்டர்கள், 4 வோட்டர் ஜெல் குச்சிகள் மற்றும் 15 அடி நீள சேவா நூல் ஆகியவையும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

ஈழநாடு
Eelanadu
14.04.2023 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 01

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்திய நிபுணரின் ஆலோசனையை கேட்டிருந்தால்?

ஐ.எம்.எப் மற்றும் அதனை தாண்டியும் - என்னும் தலைப்பில் இடம்பெற்ற பொருளாதார கருத்தரங்கில் உரையாற்றும்போது - ரணில் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார். அதாவது இந்திய பொருளாதார நிபுணர் பி.ஆர்.ஷெனாய் முன்வைத்த பரிந்துரைகளை அமுல்படுத்தியிருந்தால் நாடு இவ்வாறானதொரு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்காது.

1966 இன் பிற்பகுதியில் அப்போதைய அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக பி.ஆர்.ஷெனாய் பொருளாதார மறுசீரமைப்பிற்கான ஆலோசனை அறிக்கையொன்றை தயார் செய்திருந்தார். ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த அறிக்கையை அவர் தயார் செய்திருந்தார். அப்போது லேக் ஹவுஸ் பத்திரிகையின் தலைவராக இருந்த எஸ்மண்ட் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கு அமைவாகவே ஜே.ஆர், ஷெனாய்யை அணுகியிருந்தார். பி.ஆர்.ஷெனாய் அன்றைய சூழலில் இந்தியாவின் முன் னணி வலதுசாரி பொருளாதார நிபுணராக இருந்தவர்.

இடதுசாரிகளின் குரல்கள் வலுவாக இருந்த அன்றைய சூழலில் பிரதமர் டட்லி சேனநாயக்க ஷெனாயின் அறிக்கையை கருத்தில் கொள்ளவில்லை. இதனை தற்போது ரணில் விக்கிரமசிங்க நினைவுபடுத்தியிருக்கின்றார். கேள்வி, இந்திய பொருளாதார நிபுணர், ஷெனாயின் ஆலோசனைகளை மட்டுமா சிங்கள ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ளவில்லை?

இலங்கையின் இனப்பிரச்னையை தீர்ப்பதற்கான ஆலோசனைகளையும் இந்தியா வழங்கியிருந்தது. இந்திய புத்திஜீவிகள் பலரும் இப்போதும், 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதன் ஊடாக, இலங்கையின் தேசிய பிரச்னையை கையாளுமாறு வலியுறுத்துகின்றனர். ஆனாலும் சிங்கள ஆட்சியாளர்களோ - விடயங்களை நடைமுறைப்படுத்துவதை தட்டிக்கழித்து வரு கின்றனர். பிரச்னைகளை தீர்ப்பதற்கு பதிலாக, பிரச்னைகள் வளர்ச்சியடைவதையே, சிங்கள அரசியல்வாதிகள் ஊக்குவிக்கின்றனர். இதற்கு எந்தவொரு சிங்கள ஆட்சியாளரும் விதிவிலக்கல்ல.

இலங்கையின் தேசிய இனப்பிரச்னையை தீர்ப்பது, இலங்கைக்கே நல்லதென்னும் கருத்தை இந்திய வெளிவிவகார அமைச்சர் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார். இலங்கைக்கு விஜயம் செய்யும், இந்திய இராஜ தந்திரிகள் இதனைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனாலும் கொழும்பு இன்னும் முன்னேற்றங்களை காண்பிக்கவில்லை.

இலங்கை இவ்வாறானதொரு மோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதற்கு, நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையே பிரதான காரணமாகும். தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கைகளை தீர்த்திருந்தால், இலங்கையின் வரலாறு வேறுவிதமாக அமைந்திருக்கும். இன்றும் பொருளாதார பிரச்னைக்கான அடிப்படையான காரணமாக, இனப்பிரச்னை நோக்கப்படவில்லை - ஆகக் குறைந்தது ஒரு காரணியாகக் கூட, சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்னையை நோக்கவில்லை. ராஜபக்ஷக்களின் குடும்ப அதிகார மோகமே பிரதான காரணமாக நோக்கப்படுகின்றது. அது ஒரு காரணம் என்பதில் இருவேறு கருத்தில்லை. ஆனால், ராஜபக்ஷக்களின் குடும்ப அதிகாரம் எதனடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டது? அது தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னையை தீர்க்க முடியாமல் போனமையின் விளைவுதானே!

உள்நாட்டு யுத்தத்தை மிகவும் மோசமாக முடித்ததன் மூலம், யுத்த வெற்றியை முதலீடாகக் கெண்டுதானே, ராஜபக்ஷ குடும்பம் எழுச்சியடைந்தது. இந்த அடிப்படையில் எவருமே இதுவரையில் சிந்திக்கவில்லை. தொடர்ந்தும் தலையை விட்டுவிட்டு வாலை பிடிப்பவர்களாகவே தென்னிலங்கையின் ஆட்சியாளர்கள் இருக்கின்றனர். மறுபுறும் தமிழர்களின் ஒரு பகுதியினரின் பிரச் னையும் அவ்வாறுதான் அமைந்திருக்கின்றது. இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13ஆவது திருத்தச்சட்டத்தை உச்சபட்சமாக பயன்படுத்திக்கொண்டு, முன்னோக்கி பயணிப்பதில் இன்னமும் தெளிவான பார்வை தமிழர் பக்கத்தில் இல்லை. அதேவேளை, அதனை தாண்டியும் தமிழர்களால் பயணிக்க முடியவில்லை. கடந்த 13 வருடகால தமிழர் நகர்வுகள் எவையுமே வெற்றியை காண்பிக்கவில்லை. எனவே, ஒன்றை தாண்டி பயணிக்க முடியவில்லையாயின், அந்த இடம்தான் அரசியலை ஆழமாக புரிந்துகொள்ளவேண்டிய இடமாகும்.

# தேர்தலை நடத்துவதற்காக அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை

## பவ்ரல் அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 14

தேர்தலை நடத்துவதற்கான எந்த முயற்சியையும் அரசாங்கம் எடுப்பதாக தெரியவில்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் இரண்டாவது தடவையாகவும் ஒத்திவைப்பதற்கு தேர்தல் ஆணைக்குழு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்துவதை ஒத்திவைக்கப்பட்டுள்ளதை அடுத்து இந்த தேர்தல் இந்த வருடம் இடம்பெறுவதற்கு மிகவும் குறுகிய சந்தர்ப்பமே தற்போது இருக்கிறது.

தேர்தலை நடத்துவதற்கும் அரசாங்கம் எந்த தயாரும் இல்லாத நிலையே காணக்கூடியதாக இருக்கிறது எனவும் ரோஹன ஹெட்டியாராச்சி கூறினார்.

நீதிமன்ற உத்தரவு ஒன்றைத் தவிர 2025 வரை உள்ளூராட்சி மன்ற தேர்தல் இடம்பெறுவது நிச்சயமற்ற நிலை இருப்பதாகவே கண்காணிப்பு நடவடிக்கைகளின் போது தங்களுக்கு தெரிவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# உறுதியான தீர்மானத்தை அறிவித்தால் ஓரிரு மாதங்களுள் தேர்தல் நடத்தலாம்!

## தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப். 14

நிதி விடுவிப்பு குறித்து அரசாங்கம் உறுதியான தீர்மானத்தை அறிவித்தால் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஓரிரு மாதங்களுக்குள் நடத்த முடியும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளது.

பிரதமருடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின்போது நிதி விடு விப்பு தொடர்பில் உறுதியான தீர்மானத்தை அறிவிக்கு மாறு வலியுறுத்தியதாக நிமல் புஞ்சிஹேவா கூறி னார்.

நிதி தொடர்பில் சாதகமான தீர்மானம் கிடைக்கப் பெற்றால் அதனை அடிப்படையாகக் கொண்டு தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். குறிப்பாக ஓரிரு மாதங்களுக்குள் தேர்தலை நடத்த முடியும் எனவும் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

நிதி நெருக்கடியினால் தேர்தலை நடத்த முடியாது என் பது நாட்டில் வழக்கமாகி விட்டால் ஜனநாயகம் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ளும் எனவும் அவர் கூறினார்.

தேர்தல் தொடர்பில் மக்களின் நம்பிக்கை சிதைவடையும். நிதி இல்லாத காரணத்தினால் பாராளு மன்ற தேர்தல் மற்றும் ஜனாதிபதி தேர்தலை நடத்த முடியாது என்ற நிலை தோற்றம் பெற்றால் அது தவறானதொரு நிலைக்கு எடுத்துக் காட்டாக அமையும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# லஞ்சம் பெற்ற 2 பொலிஸார் கைது!

கொழும்பு, ஏப். 14

பொலனறுவை கடவல வெவ பிரதேசத்தில் காசிப்பு கடத்தல்காரரிடம் 9,000 ரூபா லஞ்சம் பெற்றதாக கூறப்படும் மின்னேரிய பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.


கசிப்பு கடத்தல்காரர் என்று கூறப்படும் நபரிடம் தடையின்றி கடத்தலை தொடர மூன்று போத்தல்கள் மதுபானம் கோரப்பட்டதாகவும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தன்னிடம் மதுபானம் இல்லாததால், மூன்று போத்தல்களின் மதிப்புக்கு 9ஆயிரம் ரூபாய் தரலாம் என குறித்த நபர் கூறியதாக ஆணையத்தின் மூத்த அதிகாரி தெரிவித்தார்.

அதற்கு சம்மதம் தெரிவித்த பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு பணம் கிடைத்தவுடன் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டு சந்தேகத்தின் பேரில் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் கைது செய்யப்பட்டதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கசிப்பு கடத்தலில் ஈடுபட்டதாக கூறப்படும் நபர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் புலனாய்வு அதிகாரிகள் குழு இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஏப்ரல் - 14 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : சூன்ய




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். பிள்ளைகள் மீது கவனம் தேவை. வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாகும். புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். மற்றவர்களின் வேலையையும் பார்க்க வேண்டி வரும்.

**மிதுனம்**
உங்கள் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வாகனத்தை சரி செய்வீர்கள். வியாபாரத்தில் நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். அரசாங்க விஷயங்கள் நல்ல விதத்தில் முடியும். ரெட்டிப்பு லாபம் உண்டு. சில புதுமைகளைச் செய்து கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**சிம்மம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். சக ஊழியர்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கன்னி**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். பழைய நினைவுகளில் மூழ்கும் நாள்.

**துலாம்**
சவால்கள் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் எதிர்பாராத தனலாபம் உண்டு. உத்தியோகத்தில் விஷயங்களைக் கற்றுக்கொள்வீர்கள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை குறையும். சகிப்புத் தன்மை நாள்.

**மகரம்**
உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வீர்கள். தாழ்வு மனப்பான்மையும் வந்துசெல்லும். வியாபாரத்தில் ஓரளவு லாபம் வரும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். உழைக்க வேண்டிய நாள்.

**கும்பம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வாகன வசதிப் பெருகும். விஜபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**மீனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். நல்லவர்களின் நட்பை இழந்துவிடாதீர்கள். கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். சாதித்துக் காட்டும் நாள்.

# தமிழ் மிகவும் பழமையானது, இந்தியை திணிக்க முடியாது

## தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி

சென்னை, ஏப். 14

தமிழ் மொழி மிகவும் பழமையானது என்பதால் அதன் மீது இந்தியை திணிக்க முடியாது என்று தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

சென்னை, பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் தமிழ் பயிலும் மாணவர்கள் மத்தியில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று கலந்துரையாடினார்.

கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், ஆளுநர் ஆர்.என்.ரவி கூறும்போது, தமிழ் மொழி மிகவும் பழமையானது என்பதால் அதன் மீது இந்தியை திணிக்க முடியாது. இந்தி மட்டும் அல்ல.. வேறு எந்த மொழி யையும் அதன் மீது திணிக்க முடி யாது.

இந்தியை விட மிகப்பழமையானது தமிழ் மொழி. சமஸ்கிருதம் மட்டுமே தமிழுக்கு நிகரான பழமை வாய்ந்த மொழியாகும். திருக்குறள் மனித சமூகத்திற்கு தேவையான அனைத்து கருத்துக்களையும் வழங்கும் நூல். திருக்குறளை ஆழமாக அனைவரும் பயில வேண்டும்-என்றார்.

## மரினா கடலில் பேனா நினைவுச் சின்னம்!

# மத்திய சுற்றுச்சூழல் குழு 17 இல் பரிசீலனை

சென்னை, ஏப். 14

மறைந்த தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான கருணாநிதிக்கு மெரினா கடற்கரையில் அண்ணா நினைவிட வளாகத்தில் 2.23 ஏக்கரில் அரசு சார்பில் நினைவிடம் கட்டப்பட்டு வருகிறது. உதயசூரியன் வடிவத்தில் அமைக்கப்படும் நினைவிடத்தின் முகப்பில் கருணாநிதியின் வாழ்க்கை, இலக்கிய சிந்தனைகளை நினைக்கும் வகையில் நவீன ஒளி படங்களுடன் கூடிய வளாகம் அமைக்கப்படுகிறது. மேலும் கருணாநிதியின் இலக்கிய பங்களிப்பை நினைவு கூறும் வகையில் மெரினா கடலில் 134 அடி உயரத்துக்கு (42 மீற்றர்) பிரமாண்ட பேனா நினைவு சின்னம் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இது கருணாநிதி நினைவிடத்தில் இருந்து 360 மீற்றர் தொலைவில் நடுக்கடலில் அமைய இருக்கிறது. இதனை பார்க்க இரும்பு பாலம் அமைக்கவும் திட்டம் தீட்டி உள்ளனர்.

இந்த திட்டத்துக்கு மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் முன்மொழிவு பெறப்பட்டுவிட்டது. பொதுமக்களிடமும் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற்றது. இதன் அடுத்தகட்டமாக மத்திய அரசின் அனுமதிக்காக பேனா நினைவுச் சின்னம் திட்டத்தை தமிழக அரசு அனுப்பி வைத்து உள்ளது. இந்த நிலையில் பேனா நினைவு சின்னம் அமைக்க அனுமதி கோரி மத்திய அரசின் சுற்றுச்சூழல் துறை அமைச்சகத்துக்கு தமிழக அரசின் பொதுப்பணித்துறை கடிதம் அனுப்பி இருந்தது. இது தொடர்பாக வருகிற 17ஆம் திகதி மத்திய சுற்றுச்சூழல் நிபுணர் மதிப்பீடு குழு பரிசீலனை செய்கிறது. இதன் பின்னரே பேனா சின்னம் அமைக்க கடற்கரை மண்டலம் அனுமதி கிடைக்குமா? என்பது தெரியவரும். இதற்கிடையே சென்னை பெருநகர வளர்ச்சி குழுவிடம் (சி.எம்.டி.ஏ.) பேனா நினைவு சின்னத்தின் வரை படத்தை சமர்ப்பித்து அனுமதி பெறவும் அடுத்த கட்டமாக ஏற்பாடுகள் நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.

(அ)

# சென்னை விமான நிலையத்தில் ரூபா 2 கோடி தங்கம் பறிமுதல்!

சென்னை, ஏப். 14

சென்னை விமான நிலையத்தில் ரூ.2 கோடியே 18 லட்சம் மதிப்புடைய 4 கிலோ 167 கிராம் தங்கத்தை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

சென்னை மீனம்பாக்கம் பன்னாட்டு விமான நிலையத்துக்கு துபாயில் இருந்து விமானம் வந்தது. அதில் வந்த 2 பயணிகளை சுங்க இலாகா அதிகாரிகள் சந்தேகத்தின்பேரில் நிறுத்தி விசாரித்தனர். அதிகாரிகளிடம் 2 பேரும் முன்னுக்குபின் முரணாக பேசியதால் அவர்களது உடைமைகளை சோதனை செய்தனர். அதில் விலை உயர்ந்த 20 ஐபோன்களை மறைத்து வைத்து கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர். பின்னர் 2 பேரையும் தனி அறைக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தனர். அதில் இருவரும் அணிந்து இருந்த சப்பாத்துகளில் மறைத்து வைத்திருந்த பிளாஸ்ரிக் பைகளில் தங்கம் மறைத்து வைக்கப்பட்டு இருந்ததை கண்டுபிடித்தனர். அவர்களிடம் இருந்து 1 கிலோ 965 கிராம் தங்கத்தை சுங்க இலாகா அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். டுபாயில் இருந்து வந்த மற்றொரு விமானத்தில் பயணம் செய்த வாலிபரை நிறுத்திச் சோதனை செய்தனர். அவர் முழங்காலில் அடிபட்டதுபோல பெரிய கட்டுப் போட்டு இருந்தார். அது பற்றி அதிகாரிகள் கேட்டபோது, காலில் எலும்பு முறிவு ஏற்பட்டதால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று கட்டுபோட்டு வலியுடன் நடந்து வருவதாக கூறினார். ஆனால் அதற்கான மருத்துவ சான்றிதழ் எதுவும் அவரிடம் இல்லை. எனவே சுங்க அதிகாரிகள் அவர் முழங்காலில் போடப்பட்டிருந்த கட்டை பிரித்துப் பார்த்தனர். இதில் அவருக்கு காலில் காயம் எதுவும் இல்லை. ஆனால் கட்டுக்குள் ஒரு பை மறைத்து வைக்கப்பட்டிருந்தது. அதற்குள் 1 கிலோ 228 கிராம் தங்கத்தை மறைத்து கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர். மேலும் சென்னை பன்னாட்டு விமான நிலைய வருகை பகுதியில் உள்ள கழிவறையை விமான நிலைய ஊழியர்கள் சுத்தப்படுத்தும் போது அதன் தண்ணீர் தொட்டிக்குள் பார்சல் ஒன்று இருந்தது. இதுபற்றி சுங்க அதிகாரிகளுக்கு தெரிவித்தனர். சுங்க அதிகாரிகள் அந்த பார்சலை பிரித்துப்பார்த்த போது அதனுள் 974 கிராம் தங்கம் இருந்ததை கண்டுபிடித்தனர். சென்னை விமான நிலையத்தில் ஒரே நாளில் சுங்க இலாகா அதிகாரிகள் நடத்திய சோதனையில் 3 பயணிகள் மற்றும் விமான நிலைய கழிவறையில் இருந்து மொத்தம் ரூ.2 கோடியே 18 லட்சம் மதிப்புடைய 4 கிலோ 167 கிராம் தங்கமும், ரூ.17 லட்சத்து 50 ஆயிரம் மதிப்புள்ள 20 ஐபோன்களும் பறிமுதல் செய்யப்பட்டது.

(அ)

# சென்னை விமான நிலையத்திற்கு பல்லவ மன்னன் மாமல்லன் பெயர்!

## ராமதாஸ் கோரிக்கை

சென்னை, ஏப். 14

சென்னை விமான நிலையத்தின் உள்நாட்டு முனையத்திற்கு பெருந்தலைவர் காமராசர் பெயரையும், பன்னாட்டு முனையத்திற்கு அறிஞர் அண்ணா பெயரையும் தாங்கிய பெயர்ப்பலகைகள் பத்தாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் வைக்கப்பட்டிருக்கின்றன. விமான நிலையங்கள் ஆணையத்தின் நடவடிக்கை வரவேற்கத்தக்கது என பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் கோரியுள்ளார்.

இது குறித்து வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் கூறியுள்ளதாவது:- விமான நிலையங்களின் முனையங்களுக்கு வைக்கப்பட்டிருந்த தலைவர்களின் பெயர்கள் பத்தாண்டுகளுக்கு முன் அகற்றப்பட்ட நிலையில், மீண்டும் அப்பெயர்களை சூட்ட வேண்டும் அகற்றப்பட்ட பெயர்ப்பலகைகளை மீண்டும் வைக்க வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வந்தது. பாமகவின் கோரிக்கை ஏற்கப்பட்டிருப்பதில் மகிழ்ச்சி. விமான நிலையங்களின் முனையங்களுக்கு பெயர் சூட்டப்பட்டிருப்பதைப் போல ஒட்டுமொத்த விமான நிலையத்திற்கு தமிழர்களின் வீரத்தை உலக நாடுகளுக்கு உணர்த்திய பல்லவ மாமன்னன் மாமல்லனின் பெயரைச் சூட்டுவதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் இதற்காக தமிழக அரசு பரிந்துரைக்க வேண்டும்-என்றுள்ளது.

(அ)

# பயங்கரவாதச் சட்டத்தை மீளப் பெற இலங்கை அரசிடம் வலியுறுத்துங்கள்!

## வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் 450இற்கும் மேற்பட்ட கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள் கூட்டாக கோரிக்கை

கொழும்பு, ஏப். 14

பயங்கரவாதத்தடைச்சட்டத்தைவிட மிகமோசமான முறையில் தமது பிரஜைகளின் மனித உரிமைகளை மீறத்தக்கதோர் சட்டமூலத்தினை இலங்கை அரசாங்கம் கூர்மதியின்றி முன்மொழிந்திருக்கின்றது. எனவே அச்சட்டமூலத்தை உடனடியாக வாபஸ் பெறும் அதே வேளை, பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் பிரயோகத்தை உடனடியாக இடைநிறுத்துமாறும் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக அதனை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தும்படி 450 க்கும் மேற்பட்ட கல்வியியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகள் இலங்கையிலுள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை வாபஸ் பெறும்படி அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிக்குமாறு வலியுறுத்தி சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், சுகாதாரத்துறை அதிகாரிகள், மதகுருமார்கள், சிவில் சமூகப்பிரதிநிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், தொழிற்சங்கவாதிகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச்சார்ந்த 450 க்கும் மேற்பட்டோர் கையெழுத்திட்டு, இலங்கையிலுள்ள வெளிநாட்டுத்தூதரகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே மேற்கண்டவாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் கடந்த மார்ச்மாத இறுதியில் அரச வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இச்சட்டமூலம் இம்மாத இறுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மிகமோசமான பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்யும் நோக்கில் கொண்டுவரப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமானது இலங்கையின் ஜனநாயகத்துக்குப் பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிடுகின்றோம்.

அதன்படி இப்பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை வாபஸ் பெறுமாறும், பயங்கரவாதத்தடைச்சட்டத்தை உடனடியாக நீக்குமாறும் நாம் இலங்கை அரசாங்கத்திடம் வலியுறுத்திவரும் நிலையில், இம்முயற்சிக்கு உதவுமாறு உங்களிடம் கோருகின்றோம்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தைவிட மிகமோசமான முறையில் தமது பிரஜைகளின் மனித உரிமைகளை மீறத்தக்கதோர் சட்டமூலத்தினை இலங்கை அரசாங்கம் கூர்மதியின்றி முன்மொழிந்திருக்கின்றது.

இப்புதிய சட்டமூலமானது பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளைத் தக்கவைத்திருப்பதுடன், அதனை மேலும் வலுப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளது.

இது ஜனநாயகத்தில் பொதுமக்களின் முனைப்பான பங்கேற்புக்கான இடைவெளியைச் சுருக்குவதுடன், சமுதாயங்களை அரசின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தி, அரசை இராணுவமயப்படுத்தும்.

ஆகவே பயங்கரவாதத்தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கான கடப்பாடுகளை, பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் போன்ற பிறிதொரு மிகமோசமான சட்டத்தைத் திருட்டுத்தனமாக அறிமுகப்படுத்துவதற்காகப் பயன்படுத்த முடியாது.

கடந்த 2018 ஆம் ஆண்டு பயங்கரவாதத்தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கும், கடந்த 2022 ஆம் ஆண்டு அச்சட்டத்தை மறுசீரமைப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான அழுத்தங்களைச் சமாளிக்கும் நோக்கிலான “ஏமாற்று“ நடவடிக்கைகளே தவிர, அவை மனித உரிமை மீறல்களுக்குத் தீர்வுகாணும் உண்மையான நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவையல்ல.

பயங்கரவாதத்தடைச்சட்டம் கட்டாயமாக நீக்கப்படவேண்டும் என்பதும், அது அதிவிசேட நிறைவேற்றதிகாரங்களைக்கொண்ட எந்தவொரு சட்டவாக்கத்தினைக்கொண்டும் பதிலீடு செய்யப்படக்கூடாது என்பதும் எமது தெளிவானதும், தொடர்ச்சியானதுமான நிலைப்பாடாகும்.

எனவே இவற்றைக் கருத்திற்கொண்டு உங்களது செல்வாக்கின் ஊடாகவும், இலங்கை அரசாங்கத்துடன் நீங்கள் பேணிவரும் இராஜதந்திர, அரசியல் மற்றும் பொருளாதார நல்லுறவைப் பயன்படுத்தியும் அனைத்து இலங்கையர்களுக்குமான மனித உரிமைகளையும், சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாயகத்தையும் மேம்படுத்திப் பாதுகாக்கின்ற முதன்மை நிலைப்பாட்டை நீங்கள் மேற்கொள்ளவேண்டுமென நாம் வலியுறுத்துகின்றோம்.

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்தின் முழுமையான உள்ளடக்கம், அதன் தொனி மற்றும் உண்மையான நோக்கம் என்பன இச்சட்ட மறுசீரமைப்பை அர்த்தமற்றதாக்குவதுடன், இது பயங்கரவாதத்தடைச்சட்ட மறுசீரமைப்பு தொடர்பில் இலங்கை கொண்டிருக்கும் கடப்பாடு முழுமையாக வலுவிழக்கச் செய்கின்றது.

அதேபோன்று கடந்த மாதம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தை உடனடியாக வாபஸ் பெறல், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் பிரயோகத்தை உடனடியாக இடைநிறுத்தல் மற்றும் சர்வதேச சட்டநியமங்களுக்கு அமைவாக அதனை நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தல், தண்டனைச் சட்டக்கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள பயங்கரவாதம் தொடர்பான குற்றங்கள் உள்ளடங்கலாகப் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சட்டவாக்கத்தை விரிவாகப் பரிசீலித்தல் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துமாறு நீங்கள் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டும் - என்றுள்ளது.

(அ)

# உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் திருத்தப் பரிந்துரைகளை முன்வைப்போம்

## பொதுஜன பெரமுன அறிவிப்பு

கொழும்பு, ஏப். 14

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைபின் ஒருசில ஏற்பாடுகள் அரசியலமைப்புக்கு முரணானவை. கட்சி என்ற ரீதியில் ஒருசில திருத்த பரிந்துரைகளை நீதியமைச்சரிடம் முன்வைப்போம் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.



உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைபு தொடர்பில் வினவியபோது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம். இதற்காக அரசாங்கம் எடுக்கும் சகல தீர்மானங்களையும் ஏற்றுக் கொள்ள முடியாது.அரசாங்கத்தின் தவறுகளை சுட்டிக்காட்டுவோம்.

யுத்த காலத்தில் இயற்றப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் தற்போதைய சூழலுக்கு பொருத்தமற்றதாக உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஜனநாயகம்,மனித உரிமை ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இரத்து செய்து தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் சட்டத்தை உருவாக்க ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எமது அரசாங்கத்தில் முன்னெடுக்கப்பட்டன.

பயங்கரவாத தடைச்சட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர்பான முதற்கட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தின் ஒருசில ஏற்பாடுகள் அரசியலமைப்பினால் நாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணானதாக உள்ளன. ஜனநாயகத்துக்கு எதிரான சட்டமூலங்களுக்கு ஒருபோதும் ஆதரவு வழங்க முடியாது.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் ஒருசில ஏற்பாடுகள் நிச்சயம் திருத்தம் செய்யப்பட வேண்டும்.கட்சி என்ற ரீதியில் திருத்த பரிந்துரைகளை நீதிமைச்சரிடம் முன்வைப்போம்-என்றார்.

# மருதானையில் கைப்பற்றப்பட்ட 15 ஆயிரம் கோழி முட்டைகள்!

கொழும்பு, ஏப். 14



மருதானை பொதுச் சந்தையிலுள்ள கடையொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 15,000 கோழி முட்டைகளை நுகர்வோர் விவகார அதிகார சபை கைப்பற்றியுள்ளது.

அதிகார சபை அதிகாரிகள் நடத்திய சோதனையில், குறித்த கடையில் முட்டைகளை பதுக்கி வைத்து நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் அரசாங்கம் நிர்ணயித்த விலைக்கு விற்பனையாளர்களால் முட்டைகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை, அதிக விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்யாதிருக்குமாறும், அவ்வாறான முறைகேடுகள் தொடர்பில் அதிகார சபைக்கு அறிவிக்குமாறும் நுகர்வோர் விவகார அதிகார சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

(அ)

# ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் பொதுஜன பெரமுனவுக்குள் பிளவு!

கொழும்பு, ஏப். 14

அடுத்த வருடம் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்ற தகவலை தொடர்ந்து பொதுஜன பெரமுனவிற்குள் பிளவு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

அவ்வாறான தகவல்கள் வெளியான பின்னர் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால் தான் நிச்சயம் அவருக்கு ஆதரவை வழங்குவேன் என தெரிவித்துள்ளார்.

எனினும் தனது கட்சியிலிருந்து போட்டியிடுவதற்கு பஸில் ராஜபக்ஷவே பொருத்தமானவர் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை வகிக்கும் பொது ஜன பெரமுனவின் பாராளு மன்ற உறுப்பினர்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவாக உள்ளனர் என உள்ளக தகவல் கள் தெரிவிக்கின்றன.

ஏனையவர்கள் பஸில் ராஜபக்ஷவிற்கு விசுவாசமாக காணப்படுகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

(அ)



# வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹன்ரர் இரண்டு கடைகளுடன் மோதி விபத்து!

யாழ்ப்பாணம், ஏப்.14

ஆவரங்கால் பகுதியில் நேற்று அதிகாலை வேகக்கட்டுப்பாட்டை இழந்த ஹன்ரர் ரக வாகனம் இரண்டு கடைகளை மோதித் தள்ளியது.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி அதிகாலை இறைச்சிக் கோழிகளை ஏற்றியவாறு பயணித்த வாகனத்தின் முன் ரயர் திடீரென காற்று போனதால் வாகனம் கட்டுப்பாட்டை இழந்து அருகே உள்ள ரயர் கடை மற்றும் தேங்காய் விற்பனை செய்யும் கடை ஆகியவற்றை மோதித் தள்ளி முற்றாக சேதமடைந்தது.

இதன்போது குறித்த வாகனத்தில் பயணம் செய்த சாரதியின் உதவியாளர்கள் இருவர் கைகள் மற்றும் தலைகளில் காயங்களுக்குள்ளாகி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

உழவு இயந்திரம் ஒன்றின் உதவியுடன் கடையினுள் புகுந்த வாகனத்தை பிரதேச வாசிகள் மீட்டனர்.

குறித்த விபத்து சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# 3 கோடி ரூபா தங்கம் திருட்டு; 8 பொலிஸாரிடம் விசாரணை!

கொழும்பு, ஏப். 14

இரண்டு வர்த்தகர்களை தாக்கி சுமார் 3 கோடி ரூபாய் பெறுமதி யாக தங்க நகைகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று மோதரை பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு உட்பட 3 பிரிவுகளைச் சேர்ந்த 8 பொலிஸாரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளதாக திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவு மற்றும் மோதர பொலிஸின் குற்றப் பிரிவின் மூன்று உப பொலிஸ் பரிசோதகர்கள், ஒரு பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.(அ)

# சகல கட்சிகளும் அரசுக்கு ஆதரவு வழங்கவேண்டும்

## ராஜித சேனாரத்ன கோரிக்கை



கொழும்பு, ஏப். 14

**அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு கால எல்லையின் அடிப்படையில் அரசுக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும், இது விடயத்தில் ஐக்கிய மக்கள் சக்தி முன்னிலை வகிக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.**

தனக்கு தனிப்பட்ட ரீதியில் அரசுடன் இணையும் எண்ணம் இல்லை எனவும் அவர் கூறினார்.

"ஒரே அரசியல் கோட்பாடுகளைக் கொண்ட இரண்டு குழுக்களை, நடைமுறையில் உள்ள சில முரண்பாடுகளைக் காட்டி, பிளவுபடுத்துவது, நாட்டுக்கும், இரு கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் இழைக்கும் அநீதி என்பதே எனது கருத்து." எனவும் ராஜித குறிப்பிட்டார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் ஒழுக்காற்று விசாரணை குழுவுக்கு தான் அழைக்கப்பட்டுள்ளதாக வெளியாகும் தகவல் உண்மைக்கு புறம்பானது எனவும் ராஜித கூறினார்.

(அ)

# எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 14

இலங்கையில் ஐந்து வயதுக்குட்பட்ட எடை குறைந்த குழந்தைகள் ஒரு இலட்சத்து 36ஆயிரத்து 265 பேர் இருப்பதாக தெரியவந்துள்ளது.

குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் தரவு அறிக்கைகளின்படி, இந்த ஆண்டு ஜனவரி மாதத்திற்குள், இந்த சதவீதம் 15.5 சதவீதமாக உள்ளது.

ஐந்து வயதுக்குட்பட்ட எடை குறைந்த குழந்தைகள் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவாகியுள்ளதுடன், இருநூற்றி இருபத்தி இரண்டு குழந்தைகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாநகர சபைக்குள் மட்டும் இந்த வயதுக்குட்பட்ட எடைக்குறைந்த குழந்தைகள் ஆயிரத்து நானூற்று அறுபது பேர் இருப்பதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

வயது தொடர்பான எடை இழப்பு குறைந்த எடை என்றும், குட்டை மற்றும் மெலிந்த குழந்தைகள் எடை குறைவான குழந்தைகள் என்றும் அடையாளம் காணப்படுகிறார்கள்.

குடும்ப சுகாதார சேவைகள் அலுவலகத்தின் தரவு அறிக்கைகளின்படி, நகர்ப்புறம், கிராமம் மற்றும் தோட்டங்கள் என அனைத்துத் துறைகளிலிருந்தும் எடை குறைந்த குழந்தைகளின் அதிகரித்து வருகிறது.

உணவுப் பொருட்களின் விலையேற்றம் காரணமாக ஆபத்துக் குழுக்களைச் சேர்ந்த குடும்பங்களுக்கிடையில் ஊட்டச் சத்துக் குறைபாடுகள் உருவாகி வருவதால் எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. (அ)

# நீதிமன்ற சுயாதீனத்தை பேணுவது மிகஅவசியம்

## இலங்கை தொழில்வல்லுநர்கள் கூட்டிணைவு வலியுறுத்தல்

கொழும்பு, ஏப். 14

ஜனநாயக நாடொன்றில் எவ்வித வெளியகத்தலையீடுகளுமின்றி நீதிமன்றத்தின் சுயாதீனத்துவத்தைப் பேணுவது இன்றியமையாததாகும் என்று சுட்டிக்காட்டியுள்ள இலங்கை தொழில்வல்லுநர்கள் அமைப்புக்களின் கூட்டிணைவு, அதனூடாகவே நீதிபதியினால் குறித்தவொரு விவகாரத்தை உரியவாறு அணுகவும், அவ்விவகாரம் தொடர்பில் எவ்வித பயமும் பக்கச்சார்புமின்றி நீதியை நிலைநாட்டவும் முடியும் என்று தெரிவித்துள்ளது.

இது குறித்து இலங்கை தொழில்வல்லுநர்கள் அமைப்புக்களின் கூட்டிணைவினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

அரசியலமைப்பின் பிரகாரம் எமது நாட்டின் இறையாண்மையானது பாராளுமன்றம், நிறைவேற்றதிகாரம் மற்றும் நீதிமன்றம் ஆகிய மூன்று பிரதான கட்டமைப்புக்களிலேயே தங்கியுள்ளது.

இவற்றில் அதிகாரங்களைப் பிரித்து வழங்கும் செயன்முறையைப் பொறுத்தமட்டில் நீதிமன்றமே மேலோங்குகின்றது. மக்களின் உரிமைகளை நடைமுறைப்படுத்துகின்ற மற்றும் பாதுகாக்கின்ற நீதித்துறைசார் நிர்வாகத்தில் உயர்நீதிமன்றத்துக்கே முதன்மையான இடம் வழங்கப்பட்டிருப்பதாக அரசியலமைப்பின் 105 ஆவது பிரிவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி இலங்கையின் இறையாண்மை மக்களிடத்திலேயே தங்கியிருப்பதாக அரசியலமைப்பின் 3 ஆம் பிரிவு கூறுகின்றது. எனவே இந்நாட்டின் சட்டத்தைப் பொறுத்தமட்டில் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பே இறுதியானதாகும்.

அவ்வாறிருக்கையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் தொடர்பில் உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட இடைக்காலத்தடையுத்தரவு குறித்து ஆராயுமாறு பாராளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பான குழுவுக்கு சபாநாயகர் பரிந்துரைத்திருப்பது மிகுந்த கரிசனையைத் தோற்றுவித்துள்ளது.

அரசியலமைப்புக்கு அமைவான ஜனநாயக நாடொன்றில் நீதிமன்றமும் நீதிமன்றக்கட்டமைப்புமே சட்டத்தின்படி இயங்கும் சமூகத்தைக் கட்டியெழுப்புகின்றது.

அதன்படி நீதிமன்ற சுயாதீனத்துவம் என்பது அனைத்து விதமான வெளியக அழுத்தங்கள் மற்றும் தலையீடுகள் அற்ற நிலையாகும்.

எனவே ஜனநாயக நிர்வாகக்கட்டமைப்பின் இயங்குகையை உறுதிசெய்வதற்கு நீதிமன்றத்தின் சுதந்திரம், சுயாதீனத்துவம் மற்றும் வேறாக்கம் என்பன உரியவாறு பேணப்படுவது அவசியமாகும் - என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கான அரிசி வழங்கும் திட்டத்தை துரிதப்படுத்துக!

## உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு

கொழும்பு, ஏப். 14

அரசாங்கத்தினால் 2022 மற்றும் 2023 பெரும் போக விளைச்சலில் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு அரிசி பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தை செயற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பில் உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

உணவு பாதுகாப்பு தொடர்பான துறைசார் மேற்பார்வை குழு பாராளுமன்ற உறுப்பினர் டி. வீரசிங்க தலைமையில் பாராளுமன்றத்தில் கூடிய போது இது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நிதி அமைச்சின் அதிகாரிகள்,கமத்தொழில் அமைச்சின் அதிகாரிகள், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாவட்ட செயலாளர்கள் நேரடியாகவும்,நிகழ்நிலையாகவும் இந்தக் கூட்டத்தில் இணைந்துகொண்டனர்.

இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கமைய நெல் கொள்வனவு செய்தல் மற்றும் பகிர்ந்தளிப்பதில் காணப்படும் பிரதான மூன்று சிக்கல்கள் இனங்காணப்பட்டன.

நெல் உற்பத்தி செய்யப்படாத மாவட்டங்களுக்கு அரிசி விநியோகம் செய்யும் போது ஏற்படும் தாமதம் தொடர்பில் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

அதற்கமைய நெல் உற்பத்தி செய்யப்படாத மாவட்டங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு முதற்கட்ட 10 கிலோகிராம் அரிசியை விரைவாகப் பகிர்ந்தளிப்பதற்குத் தேவையான திட்டத்தைத் தயாரிக்குமாறு குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டீ. வீரசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

அத்துடன் நெல் கொள்வனவு செய்யும் போது இடம்பெறும் முறைகேடுகள் காரணமாக அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்படுவதில்லை என்றும் இதனால் விவசாயிகளுக்குரிய நன்மைகள் சரியாகச் சென்றடைவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்த முறைகேடுகளை தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தினர். அதற்கமைய நெல் கொள்வனவின் போது இடம்பெறும் முறைகேடுகளை கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியதுடன் இதனால் விவசாயிகள் விவசாயம் செய்வதிலிருந்து விலகிச்செல்வதை தடுக்க முடியும் எனக் குறிப்பிட்டார்.

பயனாளிகளின் தரவுகள் உரிய முறையில் பேணப்படாமை காரணமாக அரிசி விநியோகிக்கும்போது பொது மக்கள் சிரமங்களுக்கு முகங்கொடுப்பது குறித்து குழுவின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டது.

(அ)

# இந்து ஆலயங்களைப் பாதுகாக்க அதிகாரம் வழங்கப்படவேண்டும்!

## உலக இந்துக்குழு இந்தியாவுக்கு கடிதம்

கொழும்பு, ஏப். 14

வடக்கு கிழக்கில் உள்ள இந்து ஆலயங்களை பாதுகாப்பதற்கு புத்தசாசன அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரம் போன்று இந்து மத விவகார அமைச்சுக்கும் அதிகாரங்கள் வழங்கப்படுவதை இந்தியா உறுதி செய்ய வேண்டும் என உலக இந்து குழுவின் உறுப்பினரும் ஊடகவியலாளருமான கல்பனா சிங் இந்தியா மத்திய அமைச்சுக்கு தமது குழு எழுத்து மூலம் கடிதம் அனுப்பியுள்ளார்.

அவரது கடிதத்தில் குறிப்பிடப்பட்டதாவது,

இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது 2000க்கும் மேற்பட்ட இந்து கோவில்கள் இலங்கை இராணுவத்தால் அழிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் (2009க்குப் பின்) இந்து மக்களின் கோவில்கள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் நுழைவதை இராணுவத்தின் மறைவின் கீழ் இயங்கும் புத்த பிக்குகள் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தின் தீவிர ஈடுபாட்டினால் சில பழைய இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டன. அது மட்டுமல்லாது வலுக்கட்டாயமாக மாற்றப்படுகின்றன (சில சந்தர்ப்பங்களில் நீதிமன்ற உத்தரவுகளை பௌத்த பிக்குகளால் மீறுகின்ற நிலையும் காணப்படுகிறது.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் இந்தச் செயற்பாடு அதிகமாகக் காணப்படுகின்றது, எனினும் தீவின் வடக்குப் பகுதியில் உள்ள சில கோவில்களும் பௌத்தர்களின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

இந்தியா உதவிகளை பெற்றுவரும் இலங்கைத் தொல்பொருள் திணைக்களமும் இராணுவமும் இந்து மத வழிபாட்டுத் தலங்களை திட்டமிட்ட முறையில் தொடர்ந்து சேதப்படுத்தி வருகின்றன.

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்ய தீர்மானித்துள்ள நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக உலகெங்கிலும் உள்ள இந்து அமைப்புகள் மத்தியில் கடும் கோபம் நிலவுகிறது.

தொல்பொருள் திணைக்களம் மற்றும் சில போர்க்குணமிக்க பௌத்த துறவிகள் சில பழைய இந்துக் கோவில்களை சேதப்படுத்துவது, பெயர்மாற்றுவது மற்றும் புத்த அடையாளமாக மாற்றுவது சகிக்க முடியாத கலாச்சார குற்றமாக கருதப்படுகிறது.

இந்துப் போராட்டக் குழுவின் உள்நாட்டுத் தலைவர் சிறி அவுன் உபாத்யாய், இது இந்துக்களுக்கும் இந்தியாவுக்கும் எதிரான தீங்கிழைக்கும் செயல் என்று கடுமையாகக் கண்டித்துள்ளார்.

மேலும் "இந்திய அரசும் இந்த விவகாரத்தை அறிந்து, விக்கிரமசிங்க இந்தியாவுக்கு வரும்போது கடும் ஆட்சேபனை தெரிவிக்க வேண்டும்" - என்றார்.

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் போது, இலங்கையில் உள்ள இந்துக் கோவில்களை இலங்கை அரசு அழித்துக் கொண்டிருந்தால், இந்த நடவடிக்கை நட்பு நாடுகளுக்கு ஆபத்தான அணுகுமுறையாக இருக்கும்.

இந்திய சுற்றுலாப்பயணிகள், இராமாயண பாதையின் மத இடங்கள், அங்குள்ள பழங்கால கோவில்கள் மற்றும் கலாசார தளங்களை பார்வையிடுகிறார்கள், மற்றும் இந்தியர்கள் இலங்கையின் சுற்றுலாத்துறையின் மிகப்பெரிய அங்கமாக உள்ளனர்.

இவ்வாறான நிலையில், இலங்கை அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைகளை ஊக்குவிப்பது சுற்றுலாத்துறையை பாதிக்கும். இந்த விவகாரத்தில் இந்திய அரசு உடனடியாக தலையிட வேண்டும் என தீர்மானம் எடுத்துள்ளோம்.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்ட இந்து சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சை மீண்டும் நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு இந்திய அரசாங்கமும் சர்வதேச நன்கொடையாளர்களும் அழுத்தம் விடுக்க வேண்டும்.

இலங்கையில் இந்து பாரம்பரியத்தை பாதுகாத்து மீண்டும் கட்டியெழுப்புதல். இந்து பாரம்பரியத்தின் சிறந்த உலகளாவிய மதிப்பை இலங்கையில் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்வதற்காக யுனெஸ்கோவின் சமய நலன்களின் பாரம்பரியம் கையில் எடுக்க வேண்டும்.

அத்தோடு இந்து மதப் பாரம்பரியத்தின் உடனடி அழிவைத் தடுக்க, தீவின் வடக்கு-கிழக்கு பிராந்தியத்திற்கான இடைக்கால சர்வதேச பாதுகாப்பு பொறிமுறையை நிறுவ இலங்கையை இந்திய அரசாங்கம் வலியுறுத்த வேண்டும் என அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பட்டாசு விற்பனை அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 14

இந்த ஆண்டு பட்டாசு உள்ளிட்ட கேளிக்கை வெடி பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் தினேஸ் பெர்னாண்டோ இதனைக் குறிப்பிட்டார்.

எனினும், கேளிக்கை வெடிபொருட்களின் உற்பத்திக்கு அவசியமான மூலப் பொருட்கள் இன்மையால் உற்பத்தி நடவடிக்கைகள் 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும், இந்த முறை சித்திரைப் புத்தாண்டை இலக்காக கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட கேளிக்கை வெடிபொருட்கள் அதிகளவில் விற்பனை செய்யப்படுவதாக அகில இலங்கை பட்டாசு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் தினேஸ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த டிசெம்பர் மாதத்தை விடவும் தற்போது கேளிக்கை வெடி பொருட்களின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் குறிப்பிடுகின்றனர். (அ)

# 7 நாட்களில் எரிபொருள் விற்பனையில் அதிகரிப்பு

## பண்டிகை காலங்களில் கூடுதல் விநியோகம்

கொழும்பு, ஏப். 14

கடந்த 7 நாட்களின் தரவுகளுக்கமைய, தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர கியூ.ஆர் அமைப்பின் மூலம் எரிபொருள் விற்பனை மற்றும் சாதாரண எரிபொருள் விற்பனையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் 60 வீதத்துக்கும் குறைவாக இருந்த விற்பனை தற்போது 80 வீதத்துக்கு மேல் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

தேசிய எரிபொருள் அனுமதிப்பத்திர கியூ.ஆர் வழிகாட்டுதல்களை கடைபிடிக்காத 66 எரிபொருள் நிலையங் களை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டதையடுத்து, இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதேவேளை, பண்டிகைக் காலங்களில் விநியோகிக்கப் படும் நாளொன்றுக்கான எரி பொருளின் அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

அதன்படி, நாளொன்றில் விநியோகிக்கப்படும் 92 ஒக்ரேன் பெற்றோலின் அளவை 4,650 மெற்றிக் தொன்னாகவும், ஒட்டோ டீசலின் அளவை 5,500 மெற்றிக் தொன்னாகவும் அதிகரிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (அ)

# பத்து மில்லியன் முட்டைகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்யலாம்

## இந்தியா அறிவிப்பு

கொழும்பு, ஏப். 14

இலங்கையில் இருந்து கொள்வனவு கட்டளை கிடைக்கப் பெற்றால் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் இலங்கைக்கு 10 மில்லியன் முட்டைகளை ஏற்றுமதி செய்ய முடியும் என இந்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்பண்ணைத் துறை செயலாளர் ராஜேஸ் குமார் சிங் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இந்திய முட்டைக்கான சந்தையாக இலங்கையும் மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது இந்திய முட்டை உற்பத்தியாளர்களுக்கு சாதகமான விடயமாகும் என இந்திய தரப்பினர் குறிப்பிடுகின்றனர்.

முன்னதாக இந்தியாவின் முக்கிய முட்டை சந்தையாக மலேசியா இருந்தது.

ரஷ்ய - உக்ரைன் யுத்தத்தை அடுத்து கோழி தீவனங்களின் விலை உயர்ந்தமையினால் பல நாடுகள் முட்டைகளை கொள்வனவு செய்வதற்காக இந்தியாவுக்கு விரைகின்றன.

இந்தநிலையில், முட்டை ஏற்றுமதி குறித்து ஊடகங்களுக்கு கருத்துரைத்துள்ள இந்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்பண்ணைத் துறை செயலாளர் ராஜேஸ் குமார் சிங், இலங்கைக்கு எந்த சந்தர்ப்பத்திலும் தேவையான முட்டையை அனுப்புவதற்கு தங்களது தரப்பு தயாராக இருப்பதாக குறிப்பிட்டார்.

கொள்வனவு கட்டளை கிடைக்கப் பெற்றால் முட்டைகள் அனுப்பப்படும்.

ஏலவே அனுப்பப்பட்ட முட்டை தொகுதி உரிய பரிசோதனைகளின் பின்னர் அனுப்பப்பட்டதாக இந்திய கால்நடை பராமரிப்பு மற்றும் பால்பண்ணைத் துறை செயலாளர் ராஜேஸ் குமார் சிங் தெரிவித்தார். (அ)

# இலங்கைத் தமிழ் ஊடகத்துறை இன்று ஆளுமைகளில் ஒருவரை இழந்துள்ளது

## தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம்

கொழும்பு, ஏப். 14

இலங்கை தமிழ் ஊடகத் துறை ஆளுமைகளில் ஒருவரை இழந்துள்ளதாக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகத்தின் மறைவு தொடர்பில் ஒன்றியம் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டத்தில் தாம் கைது செய்யப்பட்டு விடுதலையானதன் பின்னர், தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை மையப்படுத்தி சங்கமொன்றை உருவாக்க வேண்டுமென்ற சிந்தனைகளைக் கொண்டிருந்தவர்களில் அவரும் ஒருவராக இருந்தார்.

அத்துடன், குறித்த சிந்தனையை செயல்வடிவப்படுத்துவதில் ஏனைய ஊடகவியலாளர்களுக்கு உந்துசக்தியாகவும் அவர் விளங்கினா

இதனையடுத்து உருவான தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைமை பதவியை அவர் இரண்டு தடவைகள் வகித்திருந்ததாகவும், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# மத்திய வங்கியில் மாயமான பணம் 5 பேரிடம் பொலிஸார் வாக்குமூலம்

கொழும்பு, ஏப். 14

இலங்கை மத்திய வங்கியின் பெட்டகத்திலிருந்து 50 இலட்சம் ரூபா காணாமல்போன சம்பவம் தொடர்பில் 5 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் கோட்டை காவல் துறையினரின் விசாரணைக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் உதவியும் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை மத்திய வங்கியின் பெட்டகத்திலிருந்து 50 இலட்சம் ரூபா பணம் காணாமல் போன சம்பவம் தொடர்பில், மத்திய வங்கியின் சிரேஷ்ட அதிகாரிகள் பலர் கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த ஐம்பது இலட்சம் ரூபா பணத்தை யாரேனும் திருடிச் சென்றுள்ளார்களா, கணக்குப்பதிவில் குறைபாடு உள்ளதா என்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் விசாரணைக்கு தலைமை தாங்கும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் மத்திய வங்கியும் உள்ளக விசாரணையை ஆரம்பித்தது. (அ)

# பாகிஸ்தான் தமிழர்கள்: பங்குனி உத்திரம் கொண்டாடும் சில நூறு குடும்பங்களின் கதை!

பாகிஸ்தானின் துறைமுக நகரமான கராச்சியில் வசிக்கும் ஒரு சிறிய தமிழ்ச் சமூகம் சமீபத்தில் பங்குனி உத்திரத் திருவிழாவை உற்சாகத்துடன் கொண்டாடியது.

கராச்சியின் கன்டோன்மென்ட் பகுதியில் உள்ள மதராசி பாராவில் சில நூறு தமிழ் குடும்பங்கள் வசிப்பதாக சமூக மதிப்பீடுகள் காட்டுகின்றன. இங்கு தென்னிந்தியாவில் உள்ள மதராஸிலிருந்து (இப்போது சென்னை) இடம்பெயர்ந்த இந்துக்களின் மக்கள் தொகை அதிகமாக உள்ளது.

இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிவினைக்கு முன் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் கராச்சி பிரிட்டிஷ் ராஜ்ஜியத்தால் உருவாக்கப்பட்ட போது இவர்கள் இந்தியாவில் இருந்து இடம்பெயர்ந்து பாகிஸ்தானுக்கு வந்தனர்.

பிரிவினைக்குப் பிறகு, 50 முதல் 60 குடும்பங்கள் சிறந்த பொருளாதார வாய்ப்புகளை நம்பி இங்கு குடியேறின. இந்த குடும்பங்கள் நகரத்தில் உள்ள மூன்று முக்கிய குடியிருப்பு பகுதிகளான மதராசி பாரா, டிரி ரோடு மற்றும் கோரங்கி ஆகியவற்றில் பிணைப்புடன் வாழ்கின்றன.

இங்கு தமிழ் சமூகம் 1964இல் மாரியம்மன் கோவிலைக் கட்டியது. இது அவர்களின் முக்கிய மக்கள் கூடும் சபையாக விளங்குகிறது. ஹனுமன் கோவில் என்று அழைக்கப்படும் மற்றொரு பெரிய கோவிலும் இங்கு கட்டப்பட்டு வருகிறது.

55 வயதான தமிழரான மரியம் ஸ்வாமி, தமது சமூகத்திலும், அவரைச் சுற்றியுள்ள கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியிலும் தனது இறை பணிகளுக்காக நன்கு மதிக்கப்படுகிறார்.

இவரது வீட்டிற்கு எதிரே தான் ஹனுமன் கோவில் கட்டப்பட்டு வருகிறது.

எல்லா மத விழாக்களுக்கும் இங்கு வாழும் சமூகத்தினர் தங்களுக்குள்ளாகவே நிதி வசூலிப்பதாகவும், இந்தக் கோவிலைக் கட்டவும் மக்கள் நன்கொடை கொடுத்ததாகவும் அவர் தெரிவித்தார்.

**மரபுகளை உயிர்ப்புடன் வைத்திருக்கும் சமூகம்**

கராச்சியில் உள்ள தமிழ் இந்துக்கள் தென்னிந்தியாவின் மத மரபுகளை உயிர்ப்புடன் வைத்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் புனிதமான பண்டிகைகளின் போது இறைச்சியைத் தவிர்த்து, நோன்பிருந்து வெறும் கால்களில் யாத்திரை செல்வது, பங்குனி உத்திரத்தின் போது அழகு செய்வது போன்ற சடங்குகளைச் செய்கிறார்கள்.

இந்த பண்டிகையை தவிர பொங்கல், தை பூசம் மற்றும் மாரியம்மன் திருவிழா போன்ற பிற மத விழாக்களையும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடுகின்றனர்.

பங்குனி உத்திரம் அன்று விரதம் இருந்து வாழை இலையில் சாப்பாடு பரிமாறப்பட்டதாகவும் தன்னை போன்றோருக்கு புதிய அனுபவம் என்கிறார் இளம் பக்தையான ஈஷா ரமேஷ்.

“இந்த நிகழ்வுக்காக இரண்டு மாதங்களாக மீன், இறைச்சி சாப்பிடாமல் விரதம் இருக்க வேண்டும்,” என்கிறார் அவர்.

எண்பதுகளில் இருக்கும் சீதா என்ற மூதாட்டி, சமூகத்தில் உள்ள மற்ற பெண்களுக்கு சமைத்து உதவி செய்யும் போது, புழுங்கல் அரிசி, பருப்பு போன்றவற்றை கலவையின்றி சமைப்பதாக சீதா கூறினார்.

**மத நல்லிணக்கம் போற்றும் மதராஸி பாரா**

மதராசி பாராவை சுற்றிலும் பல முஸ்லிம் குடும்பங்கள் வசிக்கின்றன. நீங்கள் அந்த இடத்தை உன்னிப்பாகக் கவனித்தால், இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் சமய நல்லிணக்கத்துடன் இருப்பதை காணலாம்.

அருகே உள்ள மசூதியில் தொழுகைக்கான நேரம் வந்த









போது, மாரியம்மன் கோவிலின் காளிதாஸ் அங்குள்ள பக்தர்களிடம் அம்மன் முழக்கத்தையும் கோவில் மணி அடிப்பதையும் நிறுத்தும்படி கேட்டுக் கொண்டார்.

சிறிது நேரம் கழித்து, பங்குனி உத்திரம் ஊர்வலம் நடந்து கொண்டிருந்தபோது, வழிநெடுகிலும் நின்று கொண்டிருந்த முஸ்லிம்கள், அவர்களைப் பிரமிப்புடன் பார்த்து மரியாதையுடன் வழிவிட்டனர்.

மதராசி பாராவில் வசிக்கும் வயதான பெண்மணியான காமாட்சி கந்தசாமி, ‘நாங்கள் ஒற்றுமையாக வாழ்கிறோம், முஸ்லிம் சமூகத்தால் எங்களுக்கு எந்த பிரச்னையும் வந்ததில்லை” என்றார்.

ஊர்வலத்திற்குப் பிறகு பல இந்து பக்தர்கள் உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டனர். ஆனாலும் மரியம் சுவாமி உண்ணாவிரத்தை முடிக்காமல் மற்றவர்களுக்கு சேவை செய்தார். அது பற்றி கேட்டபோது, மாலையில் முஸ்லிம்களுடன் சேர்ந்து நோன்பு துறப்பேன் என்று அவர் என்னிடம் தெரிவித்தார்.

கராச்சியில் தமிழ் இந்துக்கள், ஒரு மத சிறுபான்மையினரின் துணைக்குழுவாக இருப்பதால், தங்கள் சொந்த வளமான கலாசார பாரம்பரியத்தின் மீது ஒரு பிடியை வைத்திருக்கிறார்கள். அத்துடன் பிரதான பாகிஸ்தானிய கலாசாரத்துடனும் அவர்கள் கலந்திருக்கிறார்கள்.

‘எனக்கு ஐம்பத்து ஐந்து வயது. ஒவ்வோர் வருடமும் ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பேன். மாதம் முழுவதும் விரதம் இருப்பேன். என் மகன், மருமகள் அனைவரும் நோன்பு துறந்தார்கள். அல்லாஹு அக்பர், இறைவன் அருளுடன் மாலையில் நோன்பு துறப்பேன். இது இங்குள்ள அனைவருக்கும் தெரியும்,” என்கிறார் மரியம் சுவாமி.

2017ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள் தொகையான 207.68 மில்லியனில் 1.73 சதவீதம் பேர் இந்துக்கள்.

கராச்சியில் தமிழ் இந்துக்கள், ஒரு மத சிறுபான்மையினரின் துணைக்குழுவாக இருப்பதால், தங்கள் சொந்த வளமான கலாசார பாரம்பரியத்தின் மீது ஒரு பிடியை வைத்திருக்கிறார்கள். அத்துடன் பிரதான பாகிஸ்தானிய கலாசாரத்துடனும் அவர்கள் கலந்திருக்கிறார்கள்.

கராச்சியின் இந்த பகுதியில் வசிப்பவர்களில் பெரும்பாலானோர் இந்துக்கள். ஆனால் பலர் கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் மதங்களைச் சேர்ந்தவர்கள் மற்றும் உருது மொழி பேசும் புலம்பெயர்ந்த சமூகங்களுடன் ஒருங்கிணைந்துள்ளனர்.

இங்குள்ள சமூகத்தில் உள்ள பெரியவர்களுக்கு தமிழ் மொழி மீது பிடிப்பு உள்ளது. ஆனால் இளைய தலைமுறையினர் தங்கள் தாய்மொழியில் சில வாக்கியங்களை பேச முடியாமல் வார்த்தைகளை தேடுகிறார்கள். இவர்களில் பலரால் தமிழில் அனைத்து பாடல்களையும் பாட முடிகிறது. ஆனால், அவர்களில் பெரும்பாலானோரால் தமிழ் மொழியை எழுத்துக் கூட்டிப் படிக்க முடியவில்லை.






# தென் இலங்கையில் ராடர் கட்டமைப்பை உருவாக்குகிறதா சீனா?



இலங்கையின் தேவேந்திரமுனை பகுதியை அண்மித்துள்ள வனப் பகுதியில் ரேடார் கட்டமைப்பு முகாமொன்றை சீனா அமைக்க திட்டமிட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் வெளியிட்ட செய்தி, இந்தோ பசுபிக் வலயத்தின் பூகோள அரசியலில் மீண்டும் பேசுபொருளாக மாறியுள்ளது.

சீனாவின் உளவு கப்பல் என இந்தியாவினால் அடையாளப்படுத்தப்பட்ட யுவான் வேன் 5 கப்பல், தென்னிலங்கையின் சீன கட்டுப்பாட்டிலுள்ள ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வருகைத் தந்தமை, அப்போது பேசுப் பொருளாக மாறியிருந்தது.

உத்தேச சீன ரேடார் முகாமின் ஊடாக, தென்னிந்தியா, இந்தியாவின் மூலோபாக சொத்துக்கள், இந்திய பெருங்கடலில் இந்திய கடற்படையின் நடவடிக்கைகள் மற்றும் அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகளை கண்காணிக்க முடியும் என அறிக்கைகளில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவின் பொருளாதார மற்றும் பாதுகாப்பு மையங்களாக கருதப்படுகின்ற கூடங்குளம் மற்றும் கல்பாக்கம் அணுமின் நிலையங்களையும், அந்த மையங்களுக்கான எரிபொருள் விநியோகத்தையும் இந்த ரேடார் முகாமின் ஊடாக சீனாவிற்கு கண்காணிக்க முடியும் என இந்திய ஊடகத் தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

இலங்கையில் ரேடார் கட்டமைப்பு முகாமொன்றை அமைப்பதற்கு சீனாவிற்கு தாம் அனுமதி வழங்கவில்லை என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இலங்கை தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இந்திய பெருங்கடல் முழுவதும் இந்தியாவின் மூலோபாய நலன்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் இந்த திட்டத்தில் சீனா, அறிவியல் அகாடெமியின் விண்வெளி தகவல்கள் ஆராய்ச்சியிலும் ஈடுபடக்கூடும் என அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

அதேபோன்று, அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளை நோக்கி பயணிக்கும் இந்திய கடற்படையின் படகுகளின் பயண நடவடிக்கைகளையும், இந்த ரேடார் கட்டமைப்பின் ஊடாக கண்காணிக்க முடியும் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த பல தசாப்தங்களாக இலங்கை மற்றும் சீனா ஆகிய நாடுகளின் செயற்பாடுகள் தொடர்பில் இந்தியா பல்வேறு சந்தர்ப்பங்களில் தனது கவலையை தெரிவித்திருந்தது.

இந்திய ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில், இலங்கை பாதுகாப்பு அமைச்சை தொடர்புக் கொண்டு வினவியபோது:

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் பொறுப்பு வெளிவிவகார அமைச்சுக்கு காணப்படுவதாக பாதுகாப்பு அமைச்சின் ஊடகப் பேச்சாளர் கேணல் நலின் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, இந்த விடயம் தொடர்பில் ஏப்ரல் மாதம் 11ம் திகதி விசேட ஊடக அறிக்கையொன்றை வெளியிட எதிர்பார்த்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் சட்டத்தரணி அலி சப்ரியை தொடர்பு கொள்ள முயற்சித்த சந்தர்ப்பத்தில், அமைச்சின் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், சீனாவின் கடனுதவித் திட்டத்தின் கீழ் ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கப்படும் சந்தர்ப்பத்தில், சீனா தனது பெல்ட் அன்ட் ரோட் மூலோபாய திட்டத்தின் தெற்காசிய மையமாக குறித்த துறைமுகத்தை பயன்படுத்தும் என இந்தியா இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்திருந்தது.

இறுதியில், குறித்த கடனை மீள செலுத்தும் இயலுமை இல்லாமையினால், 1.12 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில்,



ஹம்பாந்தோட்டை துறைமுகம் 99 வருட குத்தகையின் கீழ் சீனாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

சீனா தொடர்பில் இந்தியா வெளியிட்ட கவலையை பொருட்படுத்தாது, 2014ம் ஆண்டு நவம்பர் மாதம் சீனாவின் நீர்மூழ்கி கப்பல் மற்றும் போர் கப்பல் ஆகியவற்றுக்கு கொழும்பு துறைமுகத்திற்குள் வருகைத் தருவதற்கு இலங்கை அதிகாரிகள் அனுமதி வழங்கியிருந்தனர்.

இதன்படி, சீனா ஜனாதிபதியின் தெற்காசிய சுற்றுப் பயணத்திற்கு ஒத்ததாக நீர்மூழ்கி கப்பலொன்று கொழும்பு துறைமுகத்திற்கு வருகைத் தந்து 7 கிழமைகளுக்கு பின்னரே, சாங்செங்-2 நீர்மூழ்கி கப்பல் மற்றும் சாங் சிங் தாவோ போர் கப்பல் ஆகியன கொழும்பு துறைமுகத்திற்கு வருகைத் தந்தன.

குறிப்பாக சீன நீர்மூழ்கி கப்பலின் பயணம் தொடர்பில் இந்தியா கவலை வெளியிட்டதாக இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தனர். இந்த நீர்மூழ்கி கப்பல் மற்றும் ராணுவ கப்பல் கொழும்பு துறைமுகத்திற்குள் வருகைத் தருவதற்கு அனுமதி வழங்கப்பட்டமையினால், அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மூன்றாவது தவணையாக நடத்திய ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியை தழுவும் அளவிற்கு அது பாரிய காரணமாக அமைந்தது என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சீனாவின் முதலீட்டு திட்டமான கொழும்பு துறைமுக நகர் திட்டம் தொடர்பிலும், இந்தியா அவ்வாறே தனது கவலையை வெளியிட்டது.

கொழும்பு துறைமுக நகர திட்டமானது, நிதி சலவை மற்றும் சட்ட விரோத செயற்பாடுகளுக்கான கேந்திர நிலையமாக எதிர்காலத்தில் மாறக்கூடும் என இந்திய ஊடக நிறுவனங்கள் அவ்வப்போது சுட்டிக்காட்டியிருந்தன.

கடந்த ஆண்டு ஜூலை மாதம் முதலாம் தேதி இந்திய பிரதி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் விக்ரம் மிஸ்ரியின் தலைமையில் நடைபெற்ற உயர் மட்ட உள்ளக கூட்டத்தின் போதும், இந்த விடயம் தொடர்பில் மிக ஆழமாக கலந்துரையாடப்பட்டுள்ளதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

**3 தீவுகளில் சீன மின் திட்டங்களுக்கு இந்தியா எதிர்ப்பு**

இலங்கையின் வடப் பகுதியிலுள்ள மூன்று தீவுகளில் மின்சக்தி திட்டங்களை ஸ்தாபிப்பதற்கு சீனாவினால் 2021ம் ஆண்டு யோசனையொன்று முன்வைக்கப்பட்டது.

யாழ்ப்பாணதை அண்மித்துள்ள நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலை தீவு ஆகியவற்றில் மின்சக்தி கட்டமைப்புக்களை ஸ்தாபிப்பதற்கான திட்டத்தை 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் சீன நிறுவனமான சினோ சோ ஹைப்ரிட் டெக்னாலஜியிடம் வழங்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த மூன்று தீவுகளும் யாழ்ப்பாணத்தை அண்மித்து அமைந்துள்ளன. இந்த திட்டம் தொடர்பிலும் இந்தியா இலங்கைக்கு தனது கவலையை வெளியிட்டது.

இந்த திட்டம் தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும், குறித்த திட்டத்தை நிறுத்தும் வகையில் இலங்கை அரசாங்கம் பின்னர் நடவடிக்கை எடுத்திருந்தது.

“மூன்றாவது தரப்பிலிருந்து முன்வைக்கப்பட்ட பாதுகாப்பு தொடர்பிலான பிரச்சினை” காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கொழும்பிலுள்ள சீன தூதரகத்தின் டுவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த உத்தேச மின்சக்தி திட்டம் கைவிடப்படும் சந்தர்ப்பத்திலேயே, மாலைத்தீவில் 12 சூரிய சக்தி மின் உற்பத்தி நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு அந்த நாட்டு அரசாங்கத்துடன் நவம்பர் மாதம் 29ம் தேதி ஒப்பந்தம் கைச்சாத்திட்டதாக தூதரகம் அறிவித்துள்ளது.

**யுவான் வேங் 5 சர்ச்சை**

இந்தியாவின் எச்சரிக்கையையும் மீறி, கடந்த ஆண்டு சீன கண்காணிப்பு கப்பலான யுவான் வேங் 5 ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் வருகைத் தந்தமையை அடுத்து, சீனாவின் சந்தேகத்திற்கிடமான பாதுகாப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இந்தியா இலங்கைக்கு தனது கவலையை வெளியிட்டது.

இந்த கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் வருகைத் தருவதற்கு இலங்கை அனுமதி வழங்கிய நிலையில், எரிபொருள் மற்றும் ஏனைய சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக குறித்த கப்பல் 6 நாட்கள் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்தது.

சீனாவின் ராணுவ மேம்படுத்தல்களுக்காக, யுவான் வேங் கப்பல் மக்கள் விடுதலை ராணுவத்தின் மூலோபாய படையால் இயக்கப்படுகின்றது என பென்டகனினால் 2022ம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுவான் வேங் 5 கப்பலானது, விண்வெளி ஆய்வு மற்றும் ஆராய்ச்சி கப்பல் என சீனாவினால் அடையாளப்படுத்தப்பட்ட போதிலும், அந்த கப்பலானது கண்காணிப்பு கப்பல் என இந்திய ஊடகங்கள் அடையாளப்படுத்தியிருந்தன.

விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை ஏவுவதற்கான சிறப்பு கப்பலாக இந்த கப்பல் கருதப்படுகின்றது.

தமது எதிர்ப்பையும் மீறி, சீனாவின் கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்குள் நங்கூரமிட்டதை அடுத்து, இந்தியாவினால் தயாரிக்கப்பட்ட டோனியர் 228 சமுத்திர கண்காணிப்பு விமானத்தை இந்தியா, இலங்கைக்கு இலவசமாக வழங்கியது.

2022ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் தேதி யுவான் வேங் 5 கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகைத் தருவதற்கு 7 தினங்களுக்கு முன்னர், அதாவது ஆகஸ்ட் 15ம் தேதி இலங்கை ஜனாதிபதியை பங்குப்பெற செய்து, இந்தியாவினால் இந்த விமானம் கையளிக்கப்பட்டது.

இலங்கை விமான எல்லை மற்றும் கடல் வலயத்திற்குள் டோனியர் விமானத்தை சிறப்பாக பயன்படுத்தி, சமுத்திர கண்காணிப்பு, சமுத்திர மோசடி கண்காணிப்பு மற்றும் அவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விஸ்தரித்து, நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த விமானம் தொடர்பில் இலங்கை விமானப்படை அறிக்கையொன்றை வெளியிட்டு கூறியிருந்தது.

இலங்கையில் ஸ்தாபிக்கப்படுகின்ற சீன ராணுவ முகாம் அல்லது விநியோக வசதி மத்திய நிலையமானது, தனது கடல் தடங்களுக்கான மூலோபாய மார்க்கமாக பயன்படுத்தப்படக்கூடும் என அமெரிக்கா ஆரம்பத்திலிருந்தே சந்தேகம் வெளியிட்டுள்ளது. ●



# ஜனநாயக போராட்டத்தில் ஈடுபடுவோர் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கப்படுவர்!

## *லங்கா சமசமாஜக் கட்சி எச்சரிக்கை*

*கொழும்பு, ஏப். 14*

*உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தவுடன் உயர் நீதிமன்றத்தை நாடுவோம். திருத்தங்கள் இல்லாமல் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் ஜனநாயக போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் அனைவரும் பயங்கரவாதிகளாக சித்தரிக்கப்படுவார்கள் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.*

*கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து ரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்-*

*நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் 1979 ஆம் ஆண்டு தற்காலிக ஏற்பாடாக கொண்டு வரப்பட்டது.*

*பயங்கரவாதவாத தடைச் சட்டத்தின் பெரும்பாலான ஏற்பாடுகள் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பில் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தன்மையில் உள்ள காரணத்தி னால் பயங்கரவாத தடைச்சட் டம் ஆறு மாத காலத்தை வரையறுத்ததாக காணப்பட்டது.*

*நாட்டில் யுத்தச் சூழல் தீவிரமடைந்த பின்னணியில் இந்த சட்டத்தை மறுசீரமைக்க அவதானம் செலுத்தப்படவில்லை.*

*யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் நிறைவு பெறும் பின்னணியில் தொடர்ந்து பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்துவது பொருத்தமற்றது.*

*பயங்கரவாதத்தை ஒழிப்ப தற்காக உருவாக்கப்பட்ட இந்த சட்டம் பிற்பட்ட காலங்களில் அரசியல் பழிவாங்கல்களுக்காக பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.*

*ஜனநாயகக் கொள்கை, மனித உரிமை உள்ளிட்ட அம்சங்கள் உலக மாற்றத்துக்கு அமைய மாற்றமடைந்துள்ளன.*

*நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரான அம்சங்களை கொண்டுள்ளதாக சர்வதேசம் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ள பின்னணியில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூல வரைபு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.*

*அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் நாளுக்கு நாள் வலுபெற்றுள்ள நிலையில் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைபு வெளியிடப்பட்டுள்ளது.*

*இந்த சட்டமூல வரைபின் பெரும்பாலான ஏற்பாடுகள் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு முரணானதாக காணப் படுகிறது.*

*தடுப்பு காவல் உத்தரவு பிறப்பிக்கும் அதிகாரம் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபருக்கு வழங்க பரிந்துரைத்துள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது.*

*பொலிஸாரின் செயற்பாடுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை காணப் படுகிறது. மறுபுறம் பயங்கர வாதம் என்பதற்கான வரைவிலக்கணம் விரிவானதாக காணப்படுகிறது.*

*அரசாங்கத்தின் விருப்பத் திற்கு ஏற்ப எதனையும் பயங்கர வாத செயற்பாடாக அடையா ளப்படுத்த முடியும்.உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டவுடன் அதனை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம். திருத்தங்களில்லாமல் இந்த சட்டமூலம் சட்டமாக்கப்பட் டால் ஜனநாயக போராட்டத் தில் ஈடுபடும் சகலரும் பயங்கர வாதிகளாக சித்தரிக்கப்படுவார்கள் - என்றார்.*

*(அ)*

# 27 இலட்சம் முட்டைகளுக்கு என்ன நடந்தது?

*கொழும்பு, ஏப்ரல் 14*

*இறக்குமதி செய்யப்பட்ட 30 இலட்சம் முட்டைகளில் 27 இலட்சம் முட்டைகளுக்கு என்ன நடந்தது என்று நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் அசேல சம்பத் கேள்வி எழுப்பியுள்ளார்.*

*கொழும்பில் நேற்று (13) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.*

*இதன்போது மேலும் தெரிவித்துள்ள அவர்,*

*'புதுவருடம் பிறப்பதற்கு இன்னும் ஒரு நாளே காணப்படுகின்றது. அதற்குள் வர்த்த மாபியா தங்களது விளையாட்டை ஆரம்பித்துள்ளது.*

*முட்டை பிரச்சினை என்பது சந்தைக்குள் பாரிய பிரச்னையாக மாறியுள்ளது.*

*எனினும் பிரதான வியாபார பகுதிகளில் முட்டை விநியோகம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.*

*முட்டை தொடர்பிலான பிரச்சினை பல மாதங்களாகவே முன்னெடுக்கப்பட்டுகிறது.*

*நாளைய தினம் புதுவருடம் பிறக்கவுள்ளது.*

*புதுவருடம் பிறப்பில்கூட மக்கள் தங்களுக்கு தேவையான நுகர்வுப் பொருட்களை முழுமையாக பெற்றுக் கொள்ள முடியாதவர்களாகக் காணப்படுகின்றனர்.*

*வெளிநாடுகளிலிருந்து முட்டை இறக்குமதி செய்யப்பட்டது.*

*மொத்தமாக 30 இலட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அதில் மூன்று இலட்சம் முட்டைகள் வெதுப்பகங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள முட்டைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.*

*இறக்குமதி செய்யப்பட்ட 27 இலட்சம் முட்டைகளுக்கு என்ன நடந்தது?*

*நுகர்வோரின் நிலைமைகளை அவதானித்து, போசணைமட்டம் தொடர்பில் கரிசனைக் கொண்டே முட்டைகளை இறக்குமதி செய்தனர்.*

*முதலில் 20 இலட்சம் முட்டைகளை இறக்குமதி செய்தனர். அதில் மூன்று இலட்சம் முட்டைகள் வெதுப்பக உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.*

*அதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை பாம்புகள் தின்றுவிட்டதா என்றே நாம் கேட்கின்றோம்.*

*இதனையே நாம் வர்த்தக சந்தை மாபியா என்று கூறுகின்றோம்.*

*தரகு பணத்தை அடிப்படையாக வைத்தே நாட்டின் எதிர்காலம் தொடர்பில் இவர்கள் தீர்மானிக்கின்றனர்.*

*முட்டை விலை எவ்வாறு அதிகரித்ததோ அதேபோன்று இன்று கப்பல் வாழைப்பழத்தின் விலையும் அதிகரித்துள்ளது.*

*ஒரே தடவையில் கப்பல் வாழைப் பழத்தின் விலை எவ்வாறு அதிகரித்தது?*

*280, 330 ரூபாய்க்கே கப்பல் வாழைப் பழம் விற்பனை செய்யப்பட்டு வந்தது.*

*கடந்த வாரம் 280 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட கப்பல் வாழைப் பழமானது இன்று 650 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது.*

*எதற்காக இவ்வாறு செய்கின்றனர்.*

*மிகவும் சிரமத்துக்கு மத்தியிலேயே மக்கள் புதுவருடப் பிறப்பை கொண்டாடவுள்ளனர்.*

*ஒரு நாள் மட்டுமே அந்தக் கொண்டாட்டம் இருக்கும். சகல நாட்களுக்கும் இந்தக் கொண்டாட்டம் இருக்கப்போவதில்லை.*

*வர்த்தக சந்தை மாபியா தொடர்பில் எதற்காக துறைசார்ந்த அதிகாரிகள் மௌனம் காக்கின்றனர்' என்றார்.*






# ஊடகத்துறையை மூச்சாகக் கொண்டு உரமிட்டவர் அமரர் மாணிக்கவாசகம்

## தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் அனுதாபம்



நிந்தவூர், ஏப். 14

"ஊடகத்துறையை உயிர் மூச்சாகக் கொண்டு உரமிட்ட பேராளுமை அமரர் மாணிக்க வாசகம் ஆவார். அவரது மறைவால் ஊடக சமூகம் அடைந்துள்ள பெரும் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம்"

-இவ்வாறு, மூத்த ஊடகவியாளரும், வவுனியாவைச் சேர்ந்த வருமான பொன்னையா மாணிக்க வாசகத்தின் மறைவையொட்டி தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம் சார்பில் தலைவர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.சலீம், இணைச் செயலாளர் செல்லையா பேரின்பராசா ஆகியோர் இணைந்து இந்த அனுதாபச் செய்தியை விடுத்துள்ளனர்.

இந்த அனுதாபச் செய்தியில் மேலும் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"இலங்கையின் மூத்த ஊடகவியலாளரான ஊடகத்துறைப் பேராளுமை அமரர் பொன்னையா மாணிக்க வாசகம் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த போதிலும் அவர் வவுனியாவின் அடையாளமாகத் திகழ்ந்தார்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் குறிப்பாக பல ஊடக பயிற்சி முகாம்கள் மற்றும் நிகழ்வுளிலும் அவருடன் நெருங்கிப் பழகிய சந்தரப்பங்களில் அரவது ஊடக ஆளுமைகளைக் கண்டறியும், பகிர்ந்துகொள்ளும் சந்தரப்பங்கள் கிடைத்ததுடன்,

அவரது ஊடகத்துறை வளர்ச்சிக்கான நல்ல பல ஆக்க பூர்வமான ஆலோசனைகள், அறிவுரைகளைப் பெறத்தக்க வாய்ப்புக்கள் கிடைத்தமையும் மறக்க முடியாத நினைவுகளாக வுள்ளன.

தமிழினத்தின் பேனாமுனைப் போராளி என முத்திரை குத்தப்பட்ட அமரர் மாணிக்க வாசகம், ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடகத்துறைக்குப் பலம் சேர்த்ததுடன் அவர் இறுதிவரைக்கும் அதற்காக அர்ப்பணிப்புடனும், துணிச்சலுடனும் பங்காற்றினார்.

அவரது பிரிவால் துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினரதும், ஊடகத்துறை சார்ந்தோரதும் துயரிலும் நாமும் பங்கு கொள்கின்றோம்"எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-06)

# போதைப்பொருள் பாவித்த 09 பேர் நிந்தவூரில் கைது!

அக்கரைப்பற்று, ஏப். 14

**புனித ரம்ழான் மாதத்தில் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்ட 09 பேர் நிந்தவூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஜேர்மன் நட்புறவு பாடசாலை அருகில் உள்ள பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமாக பலர் நடமாடுவதாக பொலிஸ் விசேட பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கமைய நிந்தவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எம். நஜீப் தலைமையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது 9 சந்தேக நபர்கள் பல்வேறு போதை தரக்கூடிய பொருட்களுடன் கைதாகியுள்ளதுடன் சம்பவத்துடன் தொடர்புடைய



ஏனைய சந்தேக நபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் சந்தேகத்திற்கிடமாக நடமாடி ஆளடையாளங்களை உறுதிப்படுத்த தவறியவர்களும் சந்தேகத்தின் அடிப்படையில் தினமும் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

(அ)

# மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு மருந்துப் பொருட்கள் வழங்கல்!

மட்டக்களப்பு, ஏப். 14

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு, 10 மில்லியன் ரூபாய் பெறுமதியான மருந்துப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மருந்துகளின் தட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு புலம்பெயர்ந்து கனடா நாட்டில் வாழும் தமிழ் மக்களால் மருந்துகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

கனடியத் தமிழர் பேரவையின் உறுப்பினர் துரைரட்ணம் துஷ்யந்தன் குறித்த மருந்து பொருட்களை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் கலா ரஞ்சனி கணேஷ் லிங்கத்திடம்



கையளித்தார்.

நிகழ்வில் மட்டக்காளப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் கலா ரஞ்சனி கணேஷ் லிங்கம், போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை பணிமனை நிர்வாக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் 11ஆம் திகதி கனடியத் தமிழர் பேரவையின் 14வது ஆண்டினை முன்னிட்டு,வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள ஆறு மருத்துவமனைகளுக்கு மருத்துவப் பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# அந்தமான் தீவில் சிக்கியுள்ள மீனவர்களை மீட்க கோரிக்கை

மட்டக்களப்பு, ஏப். 14

மட்டக்களப்பு - கல்குடா பிரதேசத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் தத்தளித்த நிலையில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக இலங்கை திரும்ப முடியாமல் அந்தமான் தீவுக் கூட்டங்களில் தத்தளிக்கின்றார்கள்.

அவர்களை மீட்குமாறு சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை பிரதேச செயலர் பிரிவுக்கான அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அந்தமான் தீவில் தத்தளிக்கும் கல்குடா மீனவர்கள் தொடர்பான விடயம் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது.

மீனவர்களான ஏ.எம். முஹாஜித் (வயது 34), எம்.எச். எம். நிஸ்வி(வயது 35), பி.எம். இர்ஷாத் (வயது 33) எம். அஸ்வர் (வயது 29) ஆகியோர் மீன்பிடிக்கான அனுமதி பெற்றுக் கொண்டு கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 25ஆம் திகதி வாழைச்சேனையிலிருந்து வங்காளக் கடலுக்கு மீன்பிடிக்காக புறப்பட்டனர்.

எனினும், வழமையாக மீன்பிடியில் ஈடுபட்டு திரும்பும் காலத்தையும் தாண்டி அவர்கள் கரை திரும்பாததால் தேடுதல் நடத்தப்பட்டது.

அப்பொழுது அவர்கள் சென்ற படகின் இயந்திரம் செயலிழந்த நிலையில் அந்தமான் தீவில் சிக்கித் தத்தளிப்பது தெரியவந்தது.

இந்தியக் கரையோரக் காவல் துறையினர் அவர்களைக் காப்பாற்றி கண்காணிப்பில் வைத்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து இலங்கை கடற்றொழில் அமைச்சு, வெளிநாட்டு அலுவலகள் அமைச்சு, இந்தியத் தூதரகம் உள்ளிட்ட இன்னும் பல இடங்களுக்கும் அறிவித்து அவர்களை மீட்டுத் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

ஆயினும், ஆறு மாதங்கள் கடந்துள்ள நிலையிலும் அவர்களை மீட்பதற்கான எந்த வித முயற்சிகளும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. எனவே, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சுற்றாடல் அமைச்சருமான தங்களிடம் இந்த விடயத்தைச் சமர்பிக்கின்றோம் என்று மக்கள் அமைச்சரிடம் குறிப்பிட்டனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் நஸீர் அஹமட், இந்த விடயத்திற்கு முன்னுரிமை அளித்து அந்தமான் தீவில் சிக்கித் தவிக்கும் கல்குடா மீனவர்களை மீட்டெடுக்க அனைத்து விதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்- என்றார்.

(அ)

# அருவி பெண்கள் வலையமைப்பினால் பெண்களுக்கு இலவச சட்ட ஆலோசனை

மட்டக்களப்பு, ஏப். 14

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் பெண்களுக்கான இலவச சட்ட ஆலோசனை முகாமொன்று மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான திருமதி. மயூரி ஜனன் தலைமையில் மட்டக்களப்பு தன்னாமுனை மியாணி மண்டபத்தில் குறித்த இலவச சட்ட ஆலோசனை முகாம் இடம்பெற்றது.

குறித்த இலவச சட்ட ஆலோசனை முகாமில் சட்டத்தரணிகளான சின்னத்துரை ஜெகன், பேரின் பராஜா துஸ்யந்தி, மயூரி ஜனன், ரவிராஜ் ரமனா, நயுமுடீன் சித்தி நஜீபா உள்ளிட்டோர் கலந்து கொண்டு சட்ட ஆலோசனை வழங்கினர்.

பிரபல்யம் மிக்க சட்டத்தரணிகளை கொண்டு நடத்தப்பட்ட இச் சட்ட ஆலோசனை முகாமில் 400 இற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்துகொண்டதுடன், அதில் 150 இற்கு மேற்பட்ட பெண்களுக்கு இலவச வழக்குத்தாக்கல் மேற்கொள்வதற்கான பதிவுகளையும் மேற்கொண்டனர்.

இந்த முகாமில் முஸ்லிம் பெண்களின் விவகாரங்கள் (திருமணம், விவாகரத்து, பராமரிப்பு), இணையவழி குற்றங்கள், பிறப்பு, இறப்பு பதிவுகள் தொடர்பாகவும், விவாகம் மற்றும் விவாகரத்து, இல்லத்து வன்முறை, காணிப் பிணக்குகள், சிறுவர் பிரச்னைகள், பாலியல் துஷ்பிரயோகம், பராமரிப்பு மற்றும் உளவள ஆற்றுப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பான சட்ட ஆலோசனைகள் இதன்போது வழங்கப்பட்டதுடன், பெண் களின் பிரச்னைகள் தொடர்பாக தனித்தனியாக ஆராயப்பட்டு அவர்களுக்குரிய சட்ட ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

அத்துடன் இலவசமாக வழக்கு தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளும் இதன்போது செய்துகொடுக்கப்பட்டன.

(அ)

# ஐந்து பிள்ளைகளின் தந்தை ரயிலில் மோதுண்டு மரணம்

மட்டக்களப்பு, ஏப். 14

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற புகையிரதம் மோதியதில் சந்திவெளி - ஜீவபுரம் பகுதியைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான கந்தசாமி வரதராசா எனும் 45 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார்.

கடற்தொழிலில் ஈடுபடும் இவர் மதுபோதைக்கு அடிமையானவராக இருந்துள்ளார்.

வழமையாக காலையில் கடலுக்குச் சென்று மாலையில் வீடு திரும்பும் இவர், சில நாட்களில் இரவு நேரத்திலும் கடலுக்கு சென்று வருவார்.

சம்பவ தினமான நேற்று முன் தினம் இரவு 8.45 மணியளவில் அதிக போதையுடன் கடலுக்குச் செல்வதாக கூறிச்சென்ற இவர், ஜீவபுரம் ரயில் பாதையில் அமர்ந்திருந்தபோது, கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற ரயில் வருவதை கண்டு எழுந்து செல்ல முயற்சித்தபோதும், அதிக போதை சுய கட்டுப்பாட்டை இழக்க வைத்ததால் அவ்விடத்திலேயே ரயிலில் மோதுண்டு மரணமடைந்தார்.

சந்திவெளி பொலிஸ் பொறுப்பதிகாரியின் அழைப்பின் பேரில் சம்பவ இடத்துக்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி எம். எஸ்.எம்.நஸீர் விசாரணைகளை முன்னெடுத்து பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு சடலத்தை கொண்டு செல்ல பணித்தார்.

(அ)

# உக்ரைனுக்கு துணையாக எப்போதும் நாம் நிற்போம்

## அமெரிக்கா அதிரடி அறிவிப்பு

நியூயோர்க், ஏப். 14

**உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து ஓராண்டுக்கும் மேலான நிலையில், போர் முடிவுக்கு வராமல் தொடர்ந்து, நீடித்து வருகின்றது. இந்த போரில் உக்ரைன் நாட்டுக்கு ஆதரவாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் செயல்பட்டு வருகின்றன.**



அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கன், உக்ரைனின் வெளியுறவுத் துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபாவை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு கலந்துரையாடியுள்ளார்.

இதுபற்றி அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், ஐரோப்பிய பகுதிகளில் அமைதியும், பாதுகாப்பும் நிலவ உக்ரைனின் வெற்றி முக்கியத்துவம் வாய்ந்தது என பிளிங்கள் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால், போரில் எவ்வளவு காலம் ஆனாலும் உக்ரைனுக்கு துணையாக நிற்போம் என மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அடுத்து வரவுள்ள காலங்களில் உக்ரைனின் அதிரடி தாக்குதல் நடவடிக்கைக்கு தயாராவது பற்றி இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

அவற்றில், உக்ரைனின் பாதுகாப்பு சார்ந்த உதவிக்கான, கூட்டணி நாடுகள் மற்றும் நட்பு நாடுகளின் உறுதிமொழி உள்ளிட்டவை பற்றியும் விவாதிக்கப்பட்டன என அறிக்கை தெரிவிக்கின்றது. (அ)



# வடகொரியா தொடர்ந்தும் ஏவுகணைச் சோதனை!

## ஜப்பான் எச்சரிக்கை

டோக்கியோ, ஏப். 14

ஜப்பான் டோக்கியோவை இலக்கு வைத்து வடகொரியா தொடர்ந்தும் ஏவுகணை சோதனை நடத்தி வருவதாக ஜப்பான் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் டோக்கியோ - ஹொக்கைடோ பகுதியிலுள்ள மக்களை உடனடியாக வெளியேறுமாறு ஜப்பான் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஹொக்கைடோ மாகாணத்தின் அசஹிகவா நகரில், நேற்றுக் காலை வடகொரியா ஏவுகணை சோதனை நடத்தியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சர்வதே ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜோ பைடனின் விஜயத்தை முன்னிட்டு அயர்லாந்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு



டப்ளின், ஏப். 14

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், வடக்கு அயர்லாந்து மற்றும் அயர்லாந்து குடியரசுக்கு நான்கு நாட்கள் விஜயத்தை மேற்கொண்டுள்ளமையினால் அங்கு பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

உல்ஸ்டர் பல்கலைக்கழகத்தில் உரை நிகழ்த்துவதற்கு முன் அவர், பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் மற்றும் வடக்கு அயர்லாந்தின் அரசியல் தலைவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அதேநேரம், அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட நிகழ்வுகள் குறித்த அட்டவணை நகலை பொதுமக்களில் ஒருவர் வைத்திருந்த நிலையில் பாதுகாப்பு மீறல் குறித்து பொலிஸாரினால் அவர் விசாரணைக்கு உட்படுத்தி வருகின்றனர்.

வடக்கு அயர்லாந்தில் 30 ஆண்டுகால மோதலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு உதவிய அமைதி ஒப்பந்தம் மற்றும் பெரியவெள்ளி ஒப்பந்தத்தின் 25ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் அவரது விஜயம் அமைவதாக சர்வதேச ஊடகத் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (அ)

# உக்ரைனுக்கு மேலும் இராணுவ உதவிகள்

## கனடா அரசாங்கம் அறிவிப்பு



மொன்றியல், ஏப். 14

கனடா அரசாங்கம் இதுவரை உக்ரைனுக்கு சுமார் 8 பில்லியன் டொலர் அளவிலான பொருளாதார, இராணுவ மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்கியுள்ளது.

இந்நிலையில், உக்ரைனுக்கு மேலும் இராணுவ உதவிகளை வழங்க உள்ளதாக கனடா அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

ரொறன்ரோவில் உக்ரைன் பிரதமர் டெனிஸ் ஸ்மிஹல், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதன் பிறகு ஊடகவியலாளர்களிடம் பேசிய கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ, உக்ரைனுக்கு கனடாவில் இருந்து 21,000 ரைபிள்கள், 38 இயந்திர துப்பாக்கிகள் மற்றும் 24 லட்சம் தோட்டாக்கள் மற்றும் வெடி பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

அத்துடன், ரஷ்யாவை சேர்ந்த 14 நபர்கள் மற்றும் 34 நிறுவனங்கள் மீது கனடா அரசாங்கம் பொருளாதார தடைகளை விதிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய நிதித்துறையுடன் தொடர்புடைய 9 நிறுவனங்களுக்கு கூடுதல் தடைகளை விதிப்பதாகவும் கனடா பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். (அ)

# உக்ரைனில் நேட்டோ நாடுகளின் சிறப்பு இராணுவ படைகள் குவிப்பு

கீவ், ஏப். 14

அமெரிக்க இராணுவ பென்டகனின் ரகசிய ஆவணங்கள் பல கடந்த வாரம் இணையத்தில் வெளியாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தின.

'சீக்ரெட்' மற்றும் 'ரொப் சீக்ரெட்' என்ற பெயர்களில் கசிந்த 50-க்கும் மேற்பட்ட ஆவணங்களில் ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு உதவி புரிவதற்கான அமெரிக்கா உள்ளிட்ட நேட்டோ உறுப்பு நாடுகளின் திட்டங்கள் உட்பட பல முக்கிய தகவல்கள் வெளியாகின.

அமெரிக்க இராணுவத்தின் ரகசிய ஆவணங்கள் கசிந்ததன் பின்னணியில் ரஷ்யா இருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில், இது தொடர்பாக அமெரிக்க உளவுத்துறை தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில், உக்ரைனுக்கு நேட்டோ உறுப்புநாடுகள் ஆயுதங்களை மட்டுமே வழங்கி வருவதாக கூறப்பட்டு வந்த நிலையில் அமெரிக்கா உள்ளிட்ட சில நேட்டோ நாடுகளின் சிறப்பு இராணுவ படைகள் உக்ரைனில் செயல்படுவது இணையத்தில் கசிந்த பென்ரகனின் ரகசிய ஆவணம் மூலம் அம்பலமாகியுள்ளது.



மார்ச் 23 ஆம் திகதியிட்ட அந்த ஆவணத்தின்படி உக்ரைனில் இங்கிலாந்து அதிக அளவில் சிறப்பு இராணுவ படைகளை குவித்துள்ளதாக தெரிகின்றது.

இங்கிலாந்தின் 50 சிறப்பு படைகள் உக்ரைனில் செயல்பட்டு வருவதாக அதில் கூறப்பட்டுள்ளது. இங்கிலாந்தை தொடர்ந்து, சக நேட்டோ நாடுகளான லாட்வியா 17 படைகளையும், பிரான்ஸ் 15 படைகளையும் நிறுத்தியுள்ளதாக தெரிகின்றது.

அதேபோல் அமெரிக்கா 14 படைகளையும், நெதர்லாந்து 1 சிறப்பு படையையும் நிறுத்தியிருப்பது தெரியவந்துள்ளது. அதே சமயம் இந்த படைகள் உக்ரைனின் எந்தெந்த பகுதிகளில் நிறுத்தப்பட்டுள்ளன என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை.

உக்ரைனில் நேட்டோ நாடுகள் தங்களின் சிறப்பு இராணுவ படைகளை நிறுத்தியிருப்பது அணுஆயுத போருக்கு வழிவகுக்கும் என சர்வதேச நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

உக்ரைனில் சிறப்பு படைகள் செயல்படுவதாக வெளியாகி உள்ள தகவல் குறித்து அமெரிக்கா உட்பட சம்பந்தப்பட்ட 5 நாடுகளும் வாய்திறக்கவில்லை.




# இலங்கை உதைபந்தாட்ட அணிக்கு புதிய சிக்கல்!

முக்கியமான இரண்டு தொடர்களின் தகுதிகாண் சுற்றுகளில் பங்கேற்பதற்கான தகுதியை இலங்கை அணி இழந்துள்ளதாக இலங்கை உதைபந்து சம்மேளனத்துக்கு சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.

இலங்கையின் ஆண்கள் உதைபந்தாட்ட அணி, 2024 பரிஸ் ஒலிம்பிக் கால்பந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான ஆசிய தகுதிகாண் போட்டி மற்றும் ஆசிய உதைபந்துக் கூட்டமைப்பின் 23 வயதுக்குட்பட கட்டார் ஆசியக் கிண்ணத் தகுதிகாண் போட்டி ஆகியவற்றில் பங்கேற்க தகுதி இழந்துள்ளதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் உறுப்புரிமையை, கடந்த ஜனவரி 21ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தியுள்ளது.

குறித்த தடை நீங்கும் வரை இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் எந்தொரு சர்வதேச போட்டிகளிலும் பங்கேற்க முடியாது என அறிவிக்கப்பட்டது.

விளையாட்டுத்துறை அமைச்சரால் நடத்தப்பட்ட தேர்தலில் மூன்றாம் தரப்பின் தலையீடு இடம்பெற்றதாக இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

எனவே, எதிர்வரும் மே 25ஆம் திகதி குறித்த போட்டிகளுக்கான அட்டவணை தயாரிக்கப்படவுள்ளதாகவும் அதில் இலங்கை ஆண்கள் உதைபந்தாட்ட அணி இடம்பெறாது எனவும் சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.

## உலகக் கிண்ணம்: சென்னை, கொல்கத்தாவில் ஆட பாகிஸ்தான் விருப்பம்



இவ்வருட உலகக் கிண்ண கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பாகிஸ்தான் அணி தனது போட்டிகளை சென்னை மற்றும் கொல்கத்தாவில் விளையாடுவதற்கு விரும்பும் என இந்தியாவின் பிரிஐ செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் பாகிஸ்தான் அணி இவ்விரு நகரங்களில் விளையாடியபோது பாதுகாப்பாக உணர்ந்ததாக கூறப்படுகிறது.

ஆண்களுக்கான ஒருநாள் உலகக்கிண்ண சுற்றுப் போட்டி இந்தியாவில் எதிர்வரும் ஒக்ரோபர் 5 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அஹமதாபாத், லக்னோ, மும்பை, சென்னை, கொல்கத்தா, ராஜ்கொட், பெங்களுாரு, டெல்லி, இந்தூர், குவாஹெட்டி, ஐதராபாத், தர்மசாலா ஆகிய 12 நகரங்களில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை பிரமுகர்களுக்கும் ஐசிசி பிரமுகர்களுக்கும் இடையில் கலந்துரையாடல்கள் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

”இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை மற்றும் இந்திய அரசாங்கத்தின் தீர்மானத்திலேயே அதிகமானவை தங்கியுள்ளன. ஆனால், பாகிஸ்தான் அணி தனது பெரும்பலான போட்டிகளை கொல்கத்தா, சென்னையில் விளையாட வாய்ப்புள்ளது” என ஐசிசியுடன் தொடர்புடைய வட்டாரமொன்று தெரிவித்ததாக பிரிஐ செய்தி வெளியிட்டுள்ளது

”2016 ஆம் ஆண்டு இருபது20 உலகக்கிண்ணத் தொடரில் கொல்கத்தாவில் நடைபெற்ற இந்தியாவுடனான போட்டியில் பாகிஸ்தான் பங்குபற்றியது. அப்போது பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பில் வீரர்கள் மகிழ்ச்சியடைந்தனர். சென்னை எப்போதும் பாகிஸ்தான் அணிக்கு விசேடமானதாக உள்ளது” என அவ் வட்டாரம் தெரிவித்துள்ளது.

# அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட்: இலங்கை அணி அறிவிப்பு!



அயர்லாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இலங்கை டெஸ்ட் கிரிக்கெட் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

திமுத் கருணாரத்ன தலைமையிலான 15 பேர் கொண்ட அணிக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

ஓய்வளிக்கப்பட்டிருந்த சுழற் பந்து வீச்சாளர் லசித் எம்புல்தெனிய மீண்டும் அணிக்கு அழைக்கப்பட்ட நிலையில், விக்கட் காப்பாளர் சதீர சமரவிக்ரம மற்றும் சுழற்பந்து வீச்சாளர் துஷான் ஹேமந்த ஆகியோர் புதிய வீரர்களாக அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

எனினும், நிறைவடைந்த நியூசிலாந்து டெஸ்ட் தொடருக்கு பெயரிடப்பட்ட நிரோஷன் டிக்வெல்ல, ஓஷத பெர்னாண்டோ மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகியோர் இந்த டெஸ்ட் அணியில் இடம் பிடிக்கவில்லை.

மேலும், வேகப்பந்து வீச்சாளர்களான கசுன் ராஜித மற்றும் லஹிரு குமார ஆகியோருக்கும் இந்தப் போட்டியில் இருந்து ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

## 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் அபார வெற்றி

16ஆவது ஐபிஎல் கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் சென்னை சேப்பாக்கத்தில் நடைபெற்ற போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மற்றும் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி மோதின.

இந்தப் போட்டி சென்னையின் அணித்தலைவர் டோனிக்கு 200ஆவது போட்டியாகும்.

அதன்படி, ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

தொடக்க ஆட்டக்காரர் ஜெய்ஸ்வால் 10 ஓட்டங்களில் அவுட்டானார். ஜாஸ் பட்லருடன் ஜோடி சேர்ந்த படிக்கல் அதிரடியாக ஆடினார். இதனால் ஓட்டம் வேகம் அதிகரித்தது.

2ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 77 ஓட்டங்கள் சேர்த்த நிலையில், படிக்கல் 38 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்தில் சஞ்சு சாம்சன் டக் அவுட்டானார். ஜடேஜா இரு விக்கெட்களை வீழ்த்தி அசத்தினார்.

ஒருபுறம் விக்கெட்டுகள் வீழ்ந்தாலும் பட்லர் அரை சதமடித்தார். அவர் 52 ஓட்டத்தில் அவுட்டானார். அஸ்வின் 30 ஓட்டத்தில் வெளியேறினார்.

இறுதியில், ராஜஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 175 ஓட்டங்களை எடுத்துள்ளது.

ஹெட்மயர் 30 ஓட்டங்களில் ஆட்டமிழக்காமல் இருந்தார். சென்னை அணி சார்பில் ரவீந்திர ஜடேஜா, ஆகாஷ் சிங், தேஷ் பாண்டே ஆகியோர் தலா 2 விக்கெட்டும், மொயீன் அலி ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, 176 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சென்னை அணி களமிறங்கியது.

போட்டியின் இறுதியில் திவன் கன்வே அரை சதம் எடுத்தார். தோனி 32 ஓட்டங்கள், தொடர்ந்து ரகானே 31 ஓட்டங்களும், ஷிவம் துபே மற்றும் ருத்துராஜ் தலா 8 ஓட்டங்களும், அலி 7 ஓட்டங்களும், ஜடேஜா 25 ஓட்டங்களும், ராயுடு ஒரு ஓட்டங்கள் எடுத்தனர்.

இறுதியில் சென்னை சுப்பர் கிங்ஸ் 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 172 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது. இதன்மூலம் ராஜஸ்தான் ரோயல்ஸ் 3 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.






## இளம் துடுப்பாட்ட வீரர்களுக்கு அஷ்வின் வழங்கும் சிறப்பு பயிற்சி

துடுப்பாட்ட வீரரும், ஆர்வலருமான ஆதித்யா ரவி உருவாக்கிய “22 யார்ட்ஸ்” எனும் அமைப்பு, இளம் துடுப்பாட்ட வீரர்களின் திறமையைக் கண்டறிந்து மேம்படுத்தும் வகையிலும், லீக் போட்டிகளில் விளையாடுவதற்கான வாய்ப்பை உருவாக்குவதற்கும், இன்று முதல் நாளை மறுதினம் வரை சிறப்பு பயிற்சி முகாமை சென்னையில் நடத்துகிறது.

இதனை இந்தியாவின் அஷ்வின் ஒருங்கிணைக்கிறார்.

இது தொடர்பாக 22 யார்ட்ஸ் அமைப்பு வெளியிட்டிருக்கும் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது-

““தமிழகம் மற்றும் சர்வதேச நாடுகளில் உள்ள திறமையான கிரிக்கெட் வீரர்களை அங்கீகரிக்கும் வகையிலும், திறமைகளை அடையாளம் கண்டு அவர்களுக்கு வாய்ப்பு வழங்கும் தளமாகவும் 22 யார்ட்ஸ் அமைந்திருக்கிறது.

இந்த அமைப்பிற்கு சொந்தமாக ஐந்துக்கும் மேற்பட்ட துடுப்பாட்ட மைதானங்கள் உள்ளன.

இதில் இரண்டு மைதானங்கள் பிளட் லைட் எனப்படும் மின்னொளியில் விளையாடுவதற்கு ஏற்ற மைதானம் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் சென்னையில் புகழ்பெற்ற எம் ஏ சிதம்பரம் மைதானத்திற்கு அருகே தனித்துவமான வசதிகளுடன் அமைந்திருக்கிறது.

இந்த அமைப்பில் பதிவு செய்யும் அனைத்து வீரர்களின் தகவல்களை துல்லியமாக கையாள பிரத்தியேக செயலி ஒன்றையும் உருவாக்கியுள்ளது.

இது அவர்களின் திறமைகளை கண்டறிந்து சரியான வாய்ப்புகளை வழங்கவும் வழிவகுக்கிறது.

இந்தியாவின் அஷ்வின் கடந்த நான்கு ஐந்து வருடங்களாக எங்களின் முன்னேற்றத்தை அவதானித்து, தொடர்ந்து ஆலோசனை அளித்து வருகிறார்.

அவருடைய பணி நெருக்கடியிலும் நேரம் ஒதுக்கி வீரர்களுக்கு பயிற்சியும், ஆலோசனையும் அளித்து வருகிறார். ப்ரீத்தி அஸ்வினின் திறமையான தலைமையில் “22 யார்ட்ஸ் ஜென் நெக்ஸ்ட்“ மூலம் பயிற்சி அளிக்கப் படுகிறது.

அஷ்வினின் ஆதரவுடன் பிரிமியர் லீக்குகளிலும் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாக்கித் தரப்படுகிறது. கோடைகால பயிற்சி முகாம் இன்று முதல் நாளை மறுதினம் சென்னையில் நடைபெறுகிறது.

இதில் பங்கு பற்றி இளம் வீரர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தலாம். மேம்படுத்தலாம்: என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுமக்களை பாதிக்கும் சட்டத்துக்கு ஒருபோதுமே ஆதரவு வழங்கப்படாது!

## மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்



கொழும்பு, ஏப். 14

**"மக்களுக்கும் ஊடகங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கமாட்டாது. பொதுஜன பெரமுன ஆட்சி சர்வாதிகார ஆட்சி இல்லை என்பதை அனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டும்."**

- இவ்வாறு பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் புதிய சட்டம் ஆகியவற்றை அரசு கொண்டு வரும் என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நான் ஒரு கட்சியின் தலைவர். கட்சியுடன் பேசித்தான் கட்சி தொடர்பான நிலைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். எனினும், மக்களுக்கும் ஊடகங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கமாட்டாது.

பொதுஜன பெரமுன வெறும் கட்சி அல்ல. மக்கள் ஆணையால் தெரிவு செய்யப்பட்ட அரசும் கூட.

மொட்டு ஆட்சி சர்வாதிகார அரசு இல்லை என்பதை அனைவரும் கவனத்தில்கொள்ள வேண்டும். மக்கள் பக்கம் நின்று நாட்டின் நலன் கருதியே நாம் முடிவு எடுப்போம்-என்றார். (அ)

# ரணிலைவிடத் திறமையான வேட்பாளர்கள் மொட்டு வசம்

## கூறுகின்றார் சாகர காரியவசம்



கொழும்பு, ஏப். 14

"அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக்கூடிய தகுதியான வேட்பாளர்கள் பொதுஜன பெரமுன கட்சி வசம் உள்ளனர்." -என்று அக்கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை மொட்டு கட்சி எடுத்துள்ளதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கட்சி இன்னும் எந்த முடிவையும் எடுக்கவில்லை. தேர்தலில் போட்டியிடக்கூடிய தகுதியான வேட்பாளர்கள் எமது கட்சி வசம் உள்ளனர். ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே எமது வேட்பாளர் அறிவிக்கப்படுவார். ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் காலம் உள்ளது. தற்போது அது பற்றி அறிவிப்பது ஏற்புடையது அல்ல. ரணில் விக்கிரமசிங்கவைவிடவும் திறமையான வேட்பாளர்கள் உள்ளனர்."-எனவும் அவர் கூறினார். (அ)

# தங்காலை நீதிமன்றிலிருந்து தப்பிச் சென்ற 'குட்டா' கைது!

கொழும்பு, ஏப். 14

தங்காலை நீதிவான் நீதிமன்றில் வைத்து கடந்த 15ஆம் திகதி சிறைச்சாலை அதிகாரிகளிடமிருந்து தப்பிச் சென்ற 'குட்டா' என்பவர் மீனவர் வாடி ஒன்றில் பதுங்கியிருந்த போது கைது செய்யப்பட்டார் என தங்காலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்றும் பல வீடுகளில் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# இலங்கைக்கு கடன் வழங்கிய அனைவரும் அதன் சுமையை பகிர்ந்துகொள்ளவேண்டும்

## சீன வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டு




பீஜிங், ஏப். 14

இலங்கையின் கடன் விவகாரத்திற்கு தீர்வை காண்பதற்கு சீனாவின் நிதியமைப்புகளுக்கு சீனா தொடர்ந்தும் ஆதரவை வழங்கும் என அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங்வென்பின் தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கும் அதன் கடன்சுமைகளை குறைப்பதற்கும் பேண்தகு அபிவிருத்தியை அடைவதற்கும் சர்வதேச நிதிஅமைப்புகளுடன் இணைந்து சீனா செயற்படும் என அவர் கூறினார்.

இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் நியாயமான சுமை என்ற அடிப்படையில் வர்த்தக மற்றும் பன்னாட்டு கடன் கொடுப்பனவாளர்கள் தங்களை இணைத்துக்கொள்ளவேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார். (அ)

# ஊடகங்கள், ஊடகவியலாளர்களுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் இலங்கையில் தொடர்கின்றன

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், ஏப். 14

இலங்கையில் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான பல்வேறு அச்சுறுத்தல்களும் அடக்குமுறைகளும் தொடர்ந்த வண்ணமே உள்ளன என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குறிப்பாக தமிழ் ஊடகங்கள் பல்வேறு தரப்பினராலும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றன.

கடந்த காலங்களில் ஊடகத்துறை சார்ந்தவர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளுக்கு இதுவரையும் நீதி கிடைக்காமல் இருப்பது அனைவரும் அறிந்த ஒன்றேயாகும்.

இந்த நிலையில், சட்டரீதியாக அணுகவேண்டிய விடயங்களுக்கு ஊடகங்களுக்குள்ளே அத்துமீறி நுழைந்து ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வது கண்டிக்கத்தக்க விடயமாகும்.

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றான ஊடகத்தை அச்சுறுத்துவதும் வன்முறையில் ஈடுப்படுவதும் மக்களின் குரலை நசுக்குவதற்கு சமனானது, இதை நான் ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

பல்வேறு நெருக்கடிக்குள் மக்களுக்காக தமது செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு எதிராக யார் செயற்பட்டாலும் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் மேற்கொள்வதே அறம் ஆகும்.

மக்களுக்கான பணியை முன்னெடுத்துவரும் ஊடகங்களுக்கு எதிராக பல்வேறு வடிவங்களில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள வன்முறைச் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (அ)

# வர்த்தக நிலையங்களில் பால் மா திருடிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் கைது!

கொழும்பு, ஏப். 14

பண்டிகைக் காலத்தில் பல்பொருள் விற்பனை நிலையங்களில் இருந்து அதிக பெறுமதியான பால்மா பைக்கெற்றுகளை திருடிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள், மகன் மற்றும் மருமகள் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை குற்றப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் திருடப்பட்ட பொருட்களை ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட ஓட்டோவின் உரிமையாளரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நாட்களில் பல்பொருள் அங்காடிகளில் அதிக எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் காணப்படுவதால் சிறு குழந்தைகளின் பைகள், தலைக்கவசங்கள் மற்றும் விசேட உள்ளாடைகள் என்பன திருடப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# திருத்தப்பணிகள் இடம்பெற்றுவரும் குமுதினியை பார்வையிட்ட சிறிதரன்!

யாழ்ப்பாணம், ஏப். 14

வல்வெட்டித்துறை பகுதியில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் குமுதினி படகினை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சென்று பார்வையிட்டுள்ளார்.

நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டு வந்த குமுதினிப் படகு பழுதடைந்த நிலையில் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக மாவிலித்துறையில் தரித்திருந்ததுடன் திருத்தப்பணிகளுக்காக வல்வெட்டித்துறைக்கு கொண்டு செல்லப்பட்டு நீண்ட காலமாக திருத்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வட தாரகை படகு என்பன நெடுந்தீவுக்கான பயணிகள் போக்குவரத்து சேவையில் ஈடுபட்டு வந்த நிலையில் குமுதினி படகு பழுதடைந்தடைந்ததையடுத்து வடதாரகை படகு மாத்திரமே சேவையில் ஈடுபட்டு வருகின்றது. இதனால் நெடுந்தீவுக்கான போக்கு வரத்தில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில் திருத்த பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் குமுதினி படகின் திருத்தப்பணிகளை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், நெடுந்தீவைச் சேர்ந்த ஓய்வு



நிலை அதிபர் வரதன், நெடுந்தீவைச் சேர்ந்த கட்சியின் செயற்பாட்டாளர்கள் சென்று பார்வையிட்டு அதன் நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## இன்று...

எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. .

ஈரப்பதம் மற்றும் அதிகபட்ச வெப்ப நிலையைப் பயன்படுத்துதல் மற்றும் ஒரு நபரின் உடலில் உணரப்படும் நிலை ஆகியவற்றின் அடிப்படையில் வெப்ப குறியீட்டு முன்னறிவிப்பு கணக்கிடப்படுகிறது.

சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சின் ஆலோசனையின் படி தயாரிக்கப்பட்ட சுட்டெண்ணின் படி, 'எச்சரிக்கை' நிலை என்பது நீண்ட கால வெளிப்பாடு மற்றும் செயல்பாடுகளால் சோர்வு சாத்தியமாகும் மற்றும் வெப்ப விளைவுகளையும் ஏற்படுத்தும்.

அதன்படி, பணியிடங்களில் பணிபுரிந்தால், முடிந்தவரை அடிக்கடி நிழலில் ஓய்வெடுக்கவும், வெளியில் வேலை செய்வதைக் கட்டுப்படுத்தவும், முதியவர்கள் மற்றும் நோய்வாய்ப்பட்டவர்களைக் கவனிக்கவும் வேண்டும்.

இலகுரக மற்றும் வெள்ளை அல்லது வெளிர் நிற ஆடை அணியவும் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## பெருமளவு...

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் இவை கைப்பற்றப்பட்டன.

குறித்த கடத்தல் பொருட்கள் யாவும் மேலதிக விசாரணைகளுக்காக மன்னார் பிரதேச ஊழல் ஒழிப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கடத்தல் பொருட்கள் நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின்போது சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (அ)

## பெரமுனவுக்குள்...

ளர் பஸில் ராஜபக்ஷவே சிறந்த வேட்பாளராக இருப்பார் என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் பல்வேறு பதவி நிலைகளை வகிக்கும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு பின்னால் இருப்பதாகவும் அதே சமயம் கட்சியின் மேலும் சிலர் பஸில் ராஜபக்ஷவுக்கு விசுவாசமாக இருப்பதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக, பெரமுனவின் எம். பியான, ராஜபக்ஷவின் விசுவாசியான பேராசிரியர் ரஞ்சித் பண்டார, பண்டிகைக் காலத்திற்குப் பிறகு கட்சிக்கு புதிய தலைமை கிடைக்கும் என்று கூறியுள்ளார்.

தற்போது கட்சி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இயங்கி வருகின்றது.

இந்நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் விடயத்தில் பெரமுனவில் ஒரு பகுதியினர் ஜனாதிபதி ரணிலுக்கும் மற்றொரு பகுதியினர் பஸில் ராஜபக்ஷவுக்கும் ஆதரவை வெளிப்படுத்தி வருவதால் அந்தக் கட்சிக்குள் பிளவு உச்சமடைந்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் மேலும் கூறின. (அ)

## ஊடகங்களை...

சட்டங்களை ஒரே தடவையில் கொண்டுவர அரசு முயற்சிக்கின்றது.

மக்களின் ஜனநாயக உரிமையை, கருத்துச் சுதந்திரத்தைப் பறிக்கும் எந்தவொரு சட்டத்துக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம்.

இந்த அரசு திருந்த வேண்டும் அல்லது பதவி விலக வேண்டும்.

அதைவிடுத்து எதேச்சதிகார வழியில் இந்த அரசு பயணித்தால் மக்களுடன் சேர்ந்து அரசை ஓட ஓட விரட்டியடிப்போம். நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்துவோம்-என்றார். (அ)

## அனைவருக்கும்...

தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சூரியன் மீன ராசியிலிருந்து மேஷ ராசிக்கு பெயர்ச்சி அடைவதைத் தொடர்ந்து உதயமாகும் தமிழ், சிங்களப் புத்தாண்டு இந்நாட்டின் தமிழ், சிங்கள மக்களுக்கு மிகவும் சிறப்பும், மகிழ்வும் நிறைந்ததாகும்.

சௌபாக்கியத்தையும் சுபீட்சத்தையும் வேண்டியே அனைவரும் சம்பிரதாயங்களை செய்கின்றனர்.

கடந்த வருடம் சித்திரைப் புத்தாண்டு உதயமானபோது நாம் அனைவரும் மிகப்பெரிய நெருக்கடிக்குள் சிக்கியிருந்தோம். புத்தாண்டு கொண்டாட்டம் ஒருபுறமிருக்க, அன்றாட வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதே மிகப் பெரிய சவாலாக இருந்தது. ஆனால் இப்புத்தாண்டில் அனைவருக்கும் சிறு ஆறுதல் தருகின்ற சூழல் உருவாக்கியுள்ளது.

அடுத்த புத்தாண்டில், இதனை விடவும் சௌபாக்கியத்தையும் செழிப்பையும் ஏற்படுத்திக்கொள்ளவே நாம் முயற்சிக்கவேண்டும். நாம் அனைவரும் ஒரு தாய் மக்களாக ஒரே பாதையில் பயணித்தால் அந்த இலக்கு சாத்தியமாகும்.

இன, மத, கட்சி, நிற பேதங்களை புறந்தள்ளிவிட்டு புதிய நோக்குடன் முன்னோக்கிப் பயணிக்க இந்த சித்திரைப் புத்தாண்டில் சங்கற்பம் கொண்டால் இந்த புத்தாண்டு மட்டுமன்றி, எதிர்காலத்தையும் நலம் மிக்கதாக அமைத்துக்கொள்ள முடியும்.

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்-என்றுள்ளது. (அ)

## திருகோணமலை...

திருகோணமலை உப்புவெளி தொடக்கம் நிலாவெளி வரையான கடற்பரப்பில் தார் போன்ற திரவ படலம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் மாதிரிகள் சேகரிக்கப்பட்டுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்தது.

சேகரிக்கப்பட்ட மாதிரிகள் கொழும்பிலுள்ள விசேட ஆய்வுக்கூட பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளதாக அதிகார சபை தெரிவித்தது.

திருகோணமலை கடலை அண்மித்த பகுதியில் பயணித்த கப்பலில் இருந்து கறுப்புத் துகள்கள் வெளியேறியிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பலை சோதனையிட்டதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டது.

கப்பலில் இருந்தும் சில மாதிரிகள் சேகரிக்கப்பட்டதாக அதிகார சபை கூறியது.

கப்பலில் இருந்து கழிவுகள் வெளியேறியிருந்தால், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியது.

இதேவேளை, திருகோணமலை மற்றும் அதனை சூழவுள்ள கடற்பரப்பை சுத்தப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

## நிமோனியா...

கொண்டு செல் லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

உயிரிழந்த சிறுவனின் பிரேத பரிசோதனை முல்லைத்தீவு மாவட்ட சட்டவைத்திய அதிகாரியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சிறுவன் நிமோனியா காய்ச்சல் காரணமாக உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளதாகவும் சிறுவனின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப் படவுள்ளதாகவும் வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# சட்டவிரோத மதுபான நிலையம் முற்றுகை!

### ஒருவர் பொலிஸாரால் கைது

கொழும்பு, ஏப். 14

கொழும்பு, முல்லேரியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாலிகாகொடெல்ல பிரதேசத்தில், பாழடைந்த கட்டடமொன்றில் மிகவும் சூட்சுமமான முறையில் முன்னெடுத்துச் செல்லப்பட்ட மதுபான உற்பத்தி நிலையமொன்று சுற்றிவளைக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.முல்லேரியா பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது சுமார் 20 லீற்றர் மதுபானம் 3,187 லீற்றர் கோடா, 2 எரிவாயு அடுப்புகள், 3 எரிவாயு சிலிண்டர்கள், பாரியளாவிலான இரண்டு தண்ணீர் தாங்கிகள், 17 பீப்பாய்கள் இரண்டு செப்புத் தகடுகள் என்பவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புத்தாண்டு காலத்தில் மதுபானத்தை விநியோகிக்கும் நோக்கில் இந்த சட்ட விரோத மதுபான உற்பத்தி முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (அ)

# பலஸ்தீன மக்களுக்காக நாம் குரல் கொடுப்பது அவசியம்!

### கூறுகின்றார் விஜித ஹேரத்

கொழும்பு, ஏப்ரல் 14

இலங்கையர்கள் என்ற முறையில் நாம் இன, மத பேதங்களைக் கடந்து பலஸ்தீன மக்களுக்காக குரல்கொடுக்க வேண்டியது அவசியமாகும் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச குத்தூஸ் தினம் கொழும்பிலுள்ள லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பலஸ்தீனத்துக்குள் உலக பொலிஸ் அதிகாரி தலையிடுகின்றனர். அந்த பொலிஸ் அதிகாரி அவருக்கு தேவையான விதத்தில் பயங்கரவாதத்தை அர்த்தப்படுத்தியுள்ளார்.

மனித உரிமைகள் கேள்விக்கு உள்ளாகியுள்ளன.

பல வருடங்களுக்கு முன்னர் பலஸ்தீன மக்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்தம் மிலேச்சத்தனமான யுத்தமாகும்.

உலகமே கண்டிக்கும் யுத்தமாக இந்த யுத்தம் அமைந்துள்ளது.

உலகம் அபிவிருத்திகளை நோக்கி முன்னேற்றமடைந்தாலும் இன்னும் அசமந்தமாகியே காணப்படுகின்றது.

பலஸ்தீன மக்களின் சுதந்திரம் இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

மனித உரிமைகள் தொடர்பில் நாம் உலகளவில் பேசினாலும் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டாலும் பலஸ்தீன மக்களுக்கு எதிரான யுத்தக் குற்றம் என்பது தொடர்ந்தவாறே உள்ளது.

யுத்தக் குற்றத்தை இழைத்தவர்களுக்கு எதிராக இன்னமும் உலகளவில் சட்டம் செயற்படுத்தவில்லை.

இலங்கையர்கள் என்ற முறையில் இந்த சர்வதேச பயங்கரவாதத்துக்கு எதிராக தலையிட வேண்டியது அவசியமாகும்.

உலக பொலிஸ்காரரின் முகத்திரையை கிழிக்கவேண்டும். இன, மத பேதங்களைக் கடந்து நாம் செயற்பட வேண்டும்.

இலங்கையர்கள் என்ற முறையில் நாம் பாதிக்கப்பட்டுள்ள இந்த மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக குரல்கொடுக்க வேண்டும்-என்றார். (அ)

# மத்திய வங்கி நாணயப் பொறுப்புச் சபை அதிகாரிகள் 15 பேரிடம் வாக்குமூலம் பதிவு

கொழும்பு, ஏப். 14

இலங்கை மத்திய வங்கியின் தலைமையகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபா பணம் காணாமல் போனமை தொடர்பில் நாணய பொறுப்பு சபையின் 15 அதிகாரிகளிடம் கோட்டை பொலிஸார் வாக்கு மூலம் பெற்றுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் உடனடியாக உள்ளக விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய வங்கி மேற்கொண்டுள்ளது.

இந்த 50 இலட்சம் ரூபாவினை யாராவது திருடினார்களா அவ்வாறு இல்லை எனின் நிதி கணக்கீட்டின் போது ஏதேனும் தவறு இடம் பெற்றுள்ளதா என்பது தொடர்பிலான பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த பணம் வைக்கப்பட்டிருந்த மத்திய வங்கியின் மூன்றாவது மாடியானது அதி உயர் பாதுகாப்பு கட்டமைப்புடன் அமைக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதிகார...

நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான ஊடகத்தை முடக்குவதற்காகவே இந்த சட்டத்தை அரசாங்கம் உருவாக்குகிறது. ஊடகங்களுக்கு எதிரான இவ்வாறான அடக்குமுறைகளை அனைவரும் இணைந்து முற்றாக எதிர்க்க வேண்டும்.

ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு ஊடகம் என்பது அத்தியாவசியமான காரணியாகும். சுதந்திரமான ஊடகம் அற்ற நாட்டில் சர்வாதிகார ஆட்சி தலைதூக்கும். இலங்கை சர்வாதிகார நாடாக மாற்றமடைவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது-என்றார். (அ)

## பாரம்பரிய...

களில் இந்த உணவு திருவிழா இடம் பெறவுள்ளது. ஒவ்வொரு நாளும் மாலை 5 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை உணவு திருவிழா இடம்பெறவுள்ளது

யாழ்ப்பாணத்தில் உள்ள பாரம்பரிய உணவு வகைகளை பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தவும் உள்ளூர் முயற்சியாளர்களை ஊக்குவிக்கவும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பாரம்பரிய உணவு திருவிழாவை மேற்கொள்வதன் மூலம் அருகி வருகின்ற எமது நடைமுறைகள், பாரம்பரிய உணவு பழக்க வழக்கங்களை எமது இளைய சமுதாயத்திற்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் ஏனையோருக்கும் அறிமுகப்படுத்த வாய்ப்பாக இருக்கும்.

அந்த வகையில் மாலை வேளையில் பாரம்பரிய வாத்தியங்களை கொண்ட இசை நிகழ்ச்சியும் மாவட்ட செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# ஊடகங்களை கட்டுப்படுத்தும் சட்டத்துக்கு ஆதரவு இல்லை

## மைத்திரிபால அறிவிப்பு

கொழும்பு, ஏப். 14

ஊடகங்களைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு சட்டத்துக்கும் நாம் ஆதரவு வழங்கமாட்டோம் என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி, வானொலி மற்றும் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் புதிய சட்டம் கொண்டு வரப்படவுள்ளது. என்று நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகங்களிடம் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

தொலைக்காட்சிகள், வானொலிகள் மற்றும் சமூக ஊடகங்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும். ஊடக சுதந்திரத்தைப் புதிய சட்டம் மூலம் அரசு தட்டிப் பறிக்க முடியாது.

ஊடகங்களின் விமர்சனங்களுக்கு இந்த அரசு ஏன் அஞ்சுகின்றது? எமது நல்லாட்சி அரசையும் சில ஊடகங்கள் சகட்டுமேனிக்கு விமர்சித்தன.

அதை நாம் எதிர்கொண்டோம். விமர்சனங்களை எதிர்கொள்ள - அவற்றுக்குத் தகுந்த பதில் வழங்க அரசுக்கு முதுகெலும்பு இருக்க வேண்டும்.-என்றார். (அ)

# வர்த்தக உறவுகளை மேம்படுத்துதல் இலங்கை - ஓமான் கலந்துரையாடல்

கொழும்பு, ஏப். 14

வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்து, இலங்கைக்கும், ஓமானுக்கும் இடையே கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையிலான, மூன்றாம் சுற்று அரசியல் விவகார கலந்தாலோசனை, நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, விவசாயம், சுற்றுலாத்துறை, கல்வி, உயர்கல்வி, மீன்பிடி, வர்த்தகம், முதலீடு, வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, தொழில்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி என்பன குறித்து கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# யாழிலிருந்து கொழும்பு சென்ற இ.போ.ச பஸ்ஸின் மீது கல்வீச்சு

யாழ்ப்பாணம், ஏப். 14

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் மீது, நேற்று முன்தினம் பகல் 11.30 மணியளவில் மாரவில - ஹொர கொல்ல பிரதேசத்தில் கற்கள் வீசப்பட்டன.

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.டிப்போவுக்கு சொந்தமான பஸ் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

எதிரே மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் ஒருவர் பஸ் மீது கற்களை வீசியதாக பஸ் சாரதி மாரவில பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கல் தாக்குதலால் பேருந்தின் முன்பக்க இடது பக்கம் சேதமடைந்துள்ளதுடன், தாக்குதலை நடத்தியவர்கள் யார் என தமக்கு தெரியாது என முறைப்பாட்டாளர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். கல் வீச்சில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

கல் வீசி தாக்குதல் நடத்தியது யார் என்பது இது வரை தெரியவராத நிலையில் மாரவில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, புத்தளம்-கொழும்புக்கு இடையில் இயங்கும் தனியார் பஸ்ஸில் பணிபுரியும் நடத்துநர் ஒருவர் கடந்த 12 ஆம் திகதி பிற்பகல் நீர்கொழும்பு-தெல்வத்தை பகுதியில் வைத்து தாக்கப்பட்டுள்ளார்.

ஹலவத்தை மற்றும் நீர்கொழும்புக்கு இடையில் பயணிக்கும் தனியார் பஸ்ஸின் ஊழியர்கள் இருவர் இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (அ)

# சகலரும் சமனென்ற மகிழ்காலம் நிலவட்டும்!

## புத்தாண்டு செய்தியில் அமைச்சர் டக்ளஸ்



யாழ்ப்பாணம், ஏப். 14

பிறக்கும் சித்திரை புத்தாண்டின் வரவில் சகல இன மத சமூக மக்களும் சமனென்ற மகிழ் காலம் நீடித்து நிலவட்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அந்த வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இன மத பேதங்கள் இன்றி, தமிழ் - சிங்கள மக்களை பண்பாட்டு விழுமியங்களால் ஒன்று பட வைத்திருப்பது சித்திரை புத்தாண்டு.

அது போலவே சகல மக்களின் இன மத உணர்வுகளும் சமனென மதிக்கப்படும் சமத்துவ தேசத்தையே நாம் விரும்புகிறோம்.

மனித நேயமே எமது மதம். எமது மக்களின் இன மத அடையாளங்களை பாதுகாக்கவும், உரிமைகளை பெற்றிடவும் தேசிய நல்லிணக்க வழி நின்று தொடர்ந்தும் வெற்றி காண்பதே எமது மக்களுக்கு நாம் ஆற்றும் பணியாகும்.

வெற்றுக் கூச்சல்களும், வெறும் வார்த்தைகளும் எமது மக்களுக்கு எந்த விமோசனங்களையும் பெற்றுத் தராது. மாறாக, தீர வேண்டிய பிரச்சனைகளை தீராப் பிரச்சினையாக்கும் அரசியல் கபட நோக்கங்களே நடந்தேறும்.

மெல்லெனப் பாயும் தண்ணீர் கல்லையும் ஊடுருவிப் பாயுமென்ற எமது மதிநுட்ப வழி நின்று நாம் ஆற்றிய மாபெரும் மக்கள் பணிகளின் கண்கண்ட சாட்சியங்கள் போல்,

பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இலங்கைத்தீவு மீட்சி பெற நாம் எடுத்த அரசியல் நிலைப்பாடும், நிதானமும், இன்று மெல்லென வெற்றி கண்டு வருவது போல், இனிவரும் காலங்களில் எல்லா பிரச்னைகளுக்கும் நிரந்த தீர்வுண்டு என்ற நம்பிக்கையோடு பிறந்திருக்கும் சித்திரைப்புத்தாண்டை வரவேற்போம்.

கடல் வளம், நில வளம், கல்வி வளம், மற்றும் பொருளாதார வளமென சகல வளங்களையும் பாதுகாக்கவும், “பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற சமத்துவ நீதியை உருவாக்கவும், துயர்களும் தடைகளும் நீங்கி மகிழ்வெழுச்சியுடன் சகல உரிமைகளும் பெற்று எமது மக்கள் நிமிர்ந்தெழவும், பிறந்திருக்கும் சித்திரைப் புத்தாண்டில் இன்னமும் வலிமையுடன் உழைப்போம்”- என்றுள்ளது. (அ)

# இலங்கை குரங்குகள் சீனாவுக்கு சூழல் ஆர்வலர் கடும் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 14

இலங்கையில் காணப்படும் சில வகை குரங்குகளை சீனாவிற்கு ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்வதற்காக அரசாங்கம் குழுவொன்றை நியமித்தமை குறித்து சூழல் விவகாரங்களிற்கான சட்டத்தரணி கலாநிதி ஜகத் குணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கையில் மாத்திரம் சில வகை குரங்குகள் காணப்படுகின்றன என அவர் தெரிவித்தார்.

இந்த வகை குரங்குகளே பயிர்ச்செய்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்றால் இது குறித்த தீர்மானங்களை விஞ்ஞான அடிப்படையில் எடுக்க வேண்டும் என அவர் கூறினார்.

பயிர்களிற்கு பாதிப்பு ஏற்படுவதை தடுப்பதற்காக குரங்களை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்வது என்ற முடிவை சாதாரணமாக எடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்றுமதி செய்யப்படும் குரங்குகள் என்ன அடிப்படையில் தெரிவு செய்யப்படும்? சீனாவில் அவைகளுக்கு உகந்த காலநிலை காணப்படுமா? போன்ற விடயங்கள் குறித்து முதலில் ஆராய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

சீனாவின் உயிரியல் பூங்காவிற்கு கூட ஏன் இவ்வளவு பெருந்தொகை குரங்குகள் தேவை என்ற கேள்வி எழுந்துள்ளது என தெரிவித்துள்ள அவர், தற்போதைய சட்டப்படி சூழல் பாதுகாப்பு நோக்கங்களுக்காக மாத்திரம் விலங்குகளை ஏற்றுமதி செய்ய முடியும் எனவும் கூறினார். (அ)

# இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட சலுகை ரத்து

கொழும்பு, ஏப். 14

இராணுவத்தின் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டு வந்த சலுகையொன்று ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு வழங்கப்படும் பண்டிகை முற்பணத் தொகை இம்முறை இராணுவ அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு மட்டும் இந்த முற்பணத் தொகை வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

சம்பளத்தில் பிடித்துக் கொள்ளப்படும் இந்த முற்பணத் தொகை கடற்படை, விமானப்படைகளைச் சேர்ந்த அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், இராணுவத்தினருக்கு இந்த முற்பணத் தொகை வழங்கப்படவில்லை.

குறிப்பாக இராணுவ அதிகாரிகளுக்கு முற்பணத் தொகை வழங்கப்படவில்லை எனவும் இராணுவ வீரர்களுக்கு மட்டும் முற்பணம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# இலங்கை மாணவர்களுக்காக பாகிஸ்தானின் புலமைப்பரிசில்

கொழும்பு, ஏப். 14

இலங்கை மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டத்தை பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானின் உயர்கல்வி ஆணைக்குழு இலங்கை மாணவர்களுக்காக முழுமையாகவும் பகுதியளவிலும் நிதியுதவி வழங்குவதாக அறிவித்துள்ளது.

இதன்படி, அல்லாமா முஹம்மது இக்பால் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் முழுமையாகவும், பகுதியளவிலும் நிதியளிக்கப்பட்ட புலமைப்பரிசில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

எனவே, ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 25ஆம் திகதிக்குள் இணையத்தளம் ஊடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# விடைத்தாள் மதிப்பீட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்!

## பல்கலை விரிவுரையாளர்களிடம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 14

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை விரைவாக ஆரம்பிக்க ஒத்துழைப்பு வழங்குமாறு பரீட்சைகள் திணைக்களம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கல்வி பொதுத் தராதர உயர் தர பரீட்சை இடம்பெற்று 54 நாட்கள் கடந்துள்ள நிலையிலும், மதிப்பீட்டுப் பணிகளை இதுவரை ஆரம்பிக்க முடியாதுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர அறிக்கையூடாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலைமை காரணமாக பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் இக்கட்டான சூழலை எதிர்கொண்டுள்ளதுடன், சகல கல்விச் செயற்பாடுகளும் சமநிலையற்ற தன்மைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடுப் பணிகளை விரைவாக ஆரம்பிக்க பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் பட்சத்தில், மதிப்பீட்டுப் பணிகளுக்காக இதுவரை விண்ணப்பித்துள்ள பரீட்சகர்களின் பங்களிப்புடன், அந்த நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பிக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டின்போது ஒரு விடைத்தாளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவை அதிகரிப்பதற்கு கல்வி அமைச்சினால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

இதேவேளை, கல்வி அமைச்சினால் முன்மொழியப்பட்டுள்ள தமது சம்பளப் பிரச்னைக்கு நிதியமைச்சின் அங்கீகாரம் கிடைக்கும் வரை, உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டு பணிகளில் பங்கேற்கப் போவதில்லை என பல்கலைக்கழக விரிவுரையாளர் சங்க சம்மேளனம் கூறியுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.